# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=
பக்கங்கள் 24
30 மார்ச் 2019
புதுமை : 03 விதி : 147

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




# ஜவான்: போராளியின் முழு உருவம்




வானலைகளில் விடுதலை வேட்கையை ஒளிரவைத்தவன்



இது கீரிகளின் களம்



உப்பு மீது ஈர்ப்பு ஏன்?



தேடும் கண்கள்

# தேடும் கண்கள்



சூரிய அஸ்தமனம் குகரூபன்



வண்ணத்துப் பூச்சி
வைல்ட் ஸ்ரீலங்கா அஹமட் ஷர்புதீன்




செம்பருந்து
வைல்ட் ஸ்ரீலங்கா
ம.சாந்தமேனன்



சிலந்தி
கல்வியங்காடு ற.சாய்ராம்

புகைப்படங்களை எமக்கு அனுப்ப வேண்டிய முகவரி : puthuvithi@gmail.com

## செண்பகம்



ஆங்கிலம் : Greater coucal
உயரியல் : Centropus sinensis
நீளம் : 48 செ.மீ.

செண்பகம் பேச்சு வழக்கில் செம்பகம் என அழைக்கப்படுகின்றது. செம்போத்து, செங்காகம் என்பன வேறு பெயர்கள். சங்க நூல்கள் செம்பூழ் என இப்பறவையைக் கூறுகின்றன. குயில் இனப் பறவைகளில் அடங்குவது என்றாலும் தானே கூடுகட்டி முட்டையிடும் வழக்கம் கொண்டது.

காகம், குயிலின் தோற்றத்துடன் கபில நிற இறக்கை கொண்ட செண்பகம் காடுகள், மலைகள், வயல் - தோட்ட வெளிகள் நகரப் புறங்களிலும் காணப்படுகின்றன.

சிறுபூச்சிகள், முட்டைகள் பறவைகளின் கூடுகளைக்கூட உணவாகக் கொணடவை. பறக்கும் தன்மை குறைவாகக் கொண்ட பறவையினத்தில் வருகின்றது. மரக் கிளைகளிலோ மரம் விட்டு மரம் தாவிப் பறப்பதையோ வழக்கமாகக் கொண்டுள்ளன.

இதன் ஓசை வெகுதூரத்துக்கு கேட்கும். ஆண், பெண் ஒரே தோற்றம் கொண்டவை என்றாலும் பெண் பறவைகளின் இறக்கைகள் சற்றுப் பெரிதானவை.

பெப்ரவரி - செப்ரெம்பர் வரையான காலம் இதன் இனப்பெருக்க காலமாகும். தனது கூட்டைச் சூழ பெரும் நிலப்பரப்பை இது தக்கவைத்துக் கொள்ளும் இயல்புடையது. 3-4 முட்டைகள் இட்டு அடைகாக்கும். பூச்சிகள், புழுக்கள், சிறுபாம்புகள், மயிர்கொட்டி போன்றவற்றை உணவாக உட்கொள்கிறது. மேலும் முட்டைகள், பழங்களையும் உணவாகக் கொள்ளும். இவற்றில் நச்சுப் பழங்களும் அடக்கம்.

இலங்கை, இந்தியா, தென் சீனா இந்தோனேசியா ஆசியாவின் பல பகுதிகளில் எனப் பரந்து வாழ்கின்றன.



இலங்கை சிறுத்தை
வைல்ட் ஸ்ரீலங்கா ராகுலன் கதிர்நாதன்

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 30 மார்ச் 2019 விதி : 147

# சுமந்திரனுக்குக் கொலை அச்சுறுத்தல் அதிரடிப் படையினரின் பாதுகாப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கு பாதாளகக் குழுவினரால் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. புலம் பெயர் தமிழர்கள் சிலர் இலங்கையில் உள்ள பதாள உலகக் குழுவினருக்குப் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்துச் சுமந்திரனைக் கொலை செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமந்திரனுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் சயந்தனுக்கும், யாழ். மாநகரசபை மேயர் ஆனோல்ட்டுக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே சுமந்திரனைக் கொலை செய்ய முன்னாள் புலி உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்டனர் என்று கூறப்பட்டு அவருக்குச் சிறப்பு அதிரடிப்படையினரின் பாது காப்பு வழங்கப்பட்டது. கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்த்தலின்போது அதிரடிப்படை யினரின் பாதுகாப்புடனேயே அவர் தேர்த்தல் பிரசாரத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறப்பு அதிரடிப்படையினருக்கு ஏற்கனவே தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகளில் உச்சக் கட்டச் சாதனைகளை ஈட்டிப் பெருமை பெற்றவர்கள்.

கிழக்கு மாகாணத்திலுள்ள கிராமங்களைச் சுற்றி வளைத்து அங்குள்ளவர்களை ஒரிடத்தில் கூட்டி வைத்து அவர்களை வெட்டியும், சுட்டும், உயிருடன் எரியூட்டியும் ஒவ்வொரு சம்பவங்களின்போதும் நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்று குவித்து வரலாறு படைத்தவர்கள்.

கொக்கட்டிச்சோலை, சத்துருக் கொண்டான், வந்தாறுமூலை, புதுக்குடியிருப்பு, வீரபுரம், உடும்பன் குளம், குமாரபுரம் என அவர்கள் அரங்கேற்றிய படுகொலைகளுக்கு நீளமான பட்டியல் உண்டு.

இவ்வாறு தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதில் தீவிரம் காட்டிய சிறப்பு அதிரடிப்படையின் பாதுகாப்பைத் தமிழ் பிரதிநிதிகள் கோரியுள்ளனர் என்ற விடயம் தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் பற்றிப் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதிலும் முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளிடமிருந்தும், புலம்பெயர் தமிழர்களிடமிருந்தும் தங்களைக் காப்பாற்றும்படி அதிரடிப்படையினரிடம் கோரியுள்ளனர்.

முன்னாள் போராளிகளும், புலம்பெயர் தமிழர்களும் அவர்களுக்கு எதிரிகளாகத் தோன்றினால் அதிரடிப்படையினர் இவர்களைப் பாதுகாக்கும் நண்பர்களாகத் தோன்றினால், மக்கள் மத்தியில் இவர்கள் யார் என்ற கேள்வியும், அவர் கள் தமிழ் மக்கள் பக்கம் உண்மையாக நிற்பவர்களா என்ற சந்தேகத்தையும் பலர் மத்தியில் எழுப்பியுள்ளன.

**தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால்
தம்பி தண்டப் பிரசண்டனாம்**

# பழையதைக் கிளறினால் வன்முறை வெடிக்கும்
## பிரதமர் ரணில் எச்சரிக்கை

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் ஜெனிவாத் தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கினால் அவர்களது எல்லா விடயங்களையும் ஏற்றுக் கொண்டதாகக் கொள்ள முடியாதெனவும் இலங்கை விவகாரங்களைப் பன்னாட்டு நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லமுடியாதென வும், கலப்பு நீதிமன்றம் ஏற்கப் படமாட்டாததெனவும், நடந்து முடிந்தவற்றைக் கிளறினால் வன் முறை வெடிக்கும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

அதாவது தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் கோரினால் வன்முறை வெடிக்கும் என மிரட்டியுள்ளார். ஆனால் அது எப்படியான வன்முறை என்பது பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

1958 இல் அப்போது ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்களில் ஒருவராகவும், ரணிலின் மாமனுமாகிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழர்களுக்கு எதிராகக் கண்டி யாத்திரை நடத்தி ஆரம்பித்து வைத்த இன அழிப்புக் கலவரம் போலவா? அல்லது அவர் 1977 இல் போர் என்றால் போர்! சமாதானம் என்றால் சமாதானம்!! எனப் போர்ப் பிரகடனம் நடத்திச் செய்த இன அழிப்புப் போலவா? 1981 இல் ஐ.தே. கட்சி அமைச்சர்களாக இருந்த காமினி திசாநாயக்க, சிறில் மத்யூ தலைமையில் யாழ். பொது நூலகம் உட்பட யாழ். நகரத்தையே எரியூட்டியது போலவா? அல்லது சிறைக் கைதிகள் உட்பட பல ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்த 1983 இன அழிப்புப் போலவா? வன்முறை எப்படி அமையும் என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை. எப்படியிருப்பினும் ஐ.தே. கட்சிக்கு அப்பாவித் தமிழ் மக்களை வன்முறைகள் மூலம் அழிப்பதில் தனித்துவமான வரலாறு உண்டு.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற முழுமூச்சுடன் பாடுபட்டு ரணிலின் பறிபோன பிரதமர் பதவியை மீண்டும் பெற்றுக் கொடுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் கூறிய வன்முறை என்ற விடயம் அவர்கள் காப்பாற்றிக் கொடுத்த ஜனநாயகத்துக்குட்பட்டதா? என்பது பற்றியும் எதுவும் தெரிவிக்கவில்லை.

தமிழ் மக்களுக்கு நாங்கள் எவ்வளவு அநீதி இழைத்தாலும் த.தே.கூட்டமைப்பு எங்களைக் கைவிடமாட்டாதென்ற நம்பிக்கை எப்போதும் எங்களுக்கு உண்டு என ஐ.தே.கட்சியின் சில மூத்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

# நாயைக் கொன்ற தாயை மகன் குத்திக் கொலை

சீனாவில் 13 வயதுச் சிறுவன் ஒருவன் தனது தாயைக் கத்தியளால் குத்திக் கொலை செய்துள்ளான்.

அவன் ஒரு நாயைச் செல்லப் பிராணியாக வளர்த்து வந்ததாகவும் அவன் வேறு எந்த விடயங்களிலும் ஈடுபடாமல் அந்த நாயுடனே பொழுதைக் கழிப்பதைப் பொறுக்க முடியாத அவனது தாய் அந்த நாயைத் தூக்கி எறிந்துள்ளார். அது சுவரில் மோதி விழுந்ததில் இறந்துவிட்டது. தனது தாயின் செயலைப் பொறுக்க முடியாத அந்த 13 வயதுச் சிறுவன் கூரிய கத்தியொன்றினை எடுத்துத் தாயைத் தாறுமாறாகக் குத்திக் கொலை செய்துள்ளான்.

அவனுக்கு ஏதாவது மனநோய் உள்ளதா? என்பது தொடர்பாக நிபுணர்கள் ஆய்வு செய்து வருவதாகத் தெரிகிறது.

இது பற்றி இலங்கையைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் அது பற்றிய ஆய்வை அவன் இலங்கைக்கு வந்து சென்றுள்ளானா? என்பதிலிருந்து ஈரம்பித்தால் பயனுள்ள தகவல்கள் கிடைக்கக் கூடும் என்று தெரிவித்தார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்தா ராஜபக்ஷ பல நாய்களை குளிரூட்டப்பட்ட சொகுசு அறைகளில் வளர்த்தார் என்பதையும் அவற்றை ஒரு குறையுமின்றிப் பராமரிக்கப் பல பணியாளர்களை நியமித்திருந்தார் என்றும் அவர் நினைவு படுத்தினார். மேலும் அவர் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் கட்டாக்காலி நாய்களுக்கு 200மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

**கோவிலுக்குள் நாய் போனால் சண்டாளப் பிரார்த்தனை
கோடீஸ்வரன் வீட்டில் நாய் இருந்தால் குளிரூட்டப்பட்ட அறை**


# கடந்தவார சமூக வலைத்தளங்களில்





















சூர்ய வம்சம் தேவையாணி~சரத்குமார்'க்கு அப்புறம் ஒரே பாட்டுல பெரிய ஆளா ஆன ஜோடி இதுங்க தான் !

ஆசை மச்சான் ~ அழகு புள்ள












புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## நாக அஸ்திரத்தை ஏவுமா கூட்டமைப்பு?

மகாபாரதப் போரில் கர்ணன் நாக அஸ்திரத்தை வைத்திருக்கிறான். ஒரு தடவை அந்த அஸ்திரத்தை ஏவி அது குறி தவறினால், இரண்டாவது தடவை வீசினால் அது நிச்சயம் எதிரியின் உயிரைக் குடிக்கும் என்பது தெரிந்து, கர்ணனிடம் குந்திதேவியை அனுப்பி ஒரு முறை மட்டுமே அர்ஜுனன் மீது அதைப் பிரயோகிப்பது என்று வரம் வாங்கச் செய்கிறார் கண்ண பிரான். இதன் மூலம் முதல் நாக அஸ்திரத்திடம் இருந்து அர்ஜுனனை காப்பாற்றி மகாபாரதப் போரில் கௌரவ சேனையை தோற்கடித்து தர்மத்தை நிலைகொள்ள செய்கிறார் கிருஷ்ண பரமாத்மா.

ஆனால் இங்கு நிலைமையோ வேறு, தமிழ் மக்கள் விடயத்தில் கரிசனை கொள்ள வேண்டிய சக்திகள் கரிசனை கொள்ளவில்லை. இதனால் 31/1, 30/1, 40/1 என ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நீள்கிறது - நீளப் போகின்றன. 2015 ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் அமர்ந்தது தொடக்கம் அதற்கு முண்டுகொடுத்து வரும் தமிழ்த் தேசிக் கூட்டமைப்பும் இந்தக் கால நீடிப்புக்கு பக்கபலம். ஐ.நாவில் இலங்கைக்கு வழங்கப்படும் கால நீடிப்பு ஈழத் தமிழர் விவகாரத்தை நீர்த்துப் போகச் செய்துவிடும் என்பது பலரின் கருத்தாக உள்ளது.

வருகிறது புதிய அரசமைப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு, இந்தா வருகிறது தீர்வு... அந்தா வருகிறது தீர்வு... என்று காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இப்போது எதுவுமே சாத்தியமில்லை என்ற நிலையில் அமைதி காக்கிறது. கடந்த காலத்தில் கண்ணை மூடிக் கொண்டு ஆதரவளித்ததன் விளைவை இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறுவடை செய்யத் தொடங்கியுள்ளது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் இது தமிழ் மக்களிடமும் எதிரொலிக்கும் என நம்பலாம்.

நாடாளுமன்றிலும், பெரும்பான்மையினர் மத்தியிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முழுக்க முழுக்க எதிரான மனநிலை தலைதூக்கியுள்ள நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் வெவ்வேறு பிரச்சினைகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் இந்த வாரம் நடக்கவுள்ள வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாகாஸ்திரமாக உள்ளது. இந்த ஆயுதத்தை கூட்டமைப்பு பயன்படுத்த வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 45

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

தண்ணீரையும் அவனது இரத்தத்தையும் அந்தக் கிரவல் மண் உறிஞ்சிக் கொண்டிருந்தது. போட்டிருந்த உடை அழுக்காகி இருந்தது. எனக்கு உதவிய சகோதரியின் கைகளை கிரவல் கற்கள் உராய்ந்து திட்டுத்திட்டாக கிழித்து இரத்தத்துளிகளை வெளித்தள்ளிக் கொண்டிருந்தது.

'அக்கா உங்கட கையெல்லாம் கிரவல் கீறிப்போட்டுது. கைகளை கழுவுங்கோ" என்று கூறிய போது ' உங்கட கையும் தான் கீறுப்பட்டு இரத்தம் வருது" என அவள் உணர்த்திய போது தான் கைகளைப் பார்த்தேன். கருக்குமட்டை (பனைமட்டை) கீறியது போல சிறிதும் பெரிதுமான காயங்களும் கீறல்களும்.

பதுங்குகுழியில் இருந்து வெளியே வந்த ஒருத்தி போத்தலில் கிடந்த நீரை ஊற்றியபோது எரிவு உயிரைத் திருகியது. காயப்பட்டவர்களையும் அங்கங்களை இழந்தோரையும் நினைக்க வேதனை அழுத்தியது. கைப்பை தோளுக்குள் தொங்கிக் கொண்டு பத்திரமாக இருந்தது. நல்ல காலம் இன்று கைக்குழந்தையை கொண்டு வராமல் வந்தது. கொண்டுவந்திருந்தால் இப்படி உதவ முடியாமல் வெறும் பார்வையாளராகவும் உதவமுடியாத குற்றவுணர்விலும் தவித்திருப்பேன்.

இருப்பிடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். என்னோடு சிறுவனுக்கு உதவிபுரிந்த அக்காவும் வந்து கொண்டிருந்தார். கடையில் சில மரக்கறிகளை வாங்கிக்கொண்டோம். விலைகளைக்கேட்க தலைசுற்றியது. விட்டால் பிறகு அதுவும் கிடைக்காது. வாங்கிக்கொண்டு விலைவாசி பற்றியே கதைத்துக்கொண்டு நடந்தோம். ஒரு திருப்பத்தில் அந்த அக்கா விடைபெற்றுக் கொண்டார். அவரைக்கடந்த பின்பு தான் அவரிடம் பெயரைக்கூட கேட்காதது ஞாபகத்திற்கு வந்தது.

அறிமுகங்களை விட அவலங்களைப் பேசும் மக்களாகி விட்டோமே. இப்படியே போனால் எங்கள் மனநிலைகள் எப்படி இருக்குமோ? திருகிவிட்ட இயந்திரங்களாக திரியப்போகிறோமா? தப்பிப் பிழைப்போமா? தானியங்களும் உணவும் கிடைக்காமல் பட்டினியால் செத்திடுவோமா? குண்டுகள் உயிரைக் குடித்திடுமா? சிதறி ஆங்காங்கு அநாதையராய் இறந்து போவோமா? தனித்த பயணத்தில் குழப்பமான சிந்தனைகள் மனதை தேய்த்துக்கொண்டிருந்தது. யாரோடாவது கதைத்துக் கொண்டிருப்பது நல்லது. இல்லது விட்டால் பைத்திய நிலைதான் அடைய வேணும். அந்தச் சிந்தனை இந்தச் சிந்தனை இல்லாமல் கதைப்பது நல்லதே.

கணவர் குழந்தையை மரத்தில் சேலையில் ஏணை கட்டி நித்திரையாக்கிக் கொண்டிருந்தார். பின் பக்கமாக போனதால் நான் வந்ததை அவர் கவனிக்கவில்லை. தாலாட்டு தனியே பெண்களுக்கு உரியதென யார் சொன்னது ? ஆணின் குரலுக்கும் சக்தியுண்டு. அழகான தாலாட்டில் மகள் உறங்கிக்கொண்டிருந்தாள்.

வெயிலுக்கால போன உடனே பிள்ளைக்கு பால் கொடுக்க முடியாது. தேசிப்புளி கரைத்த தண்ணீரை மகன் குடித்துக் கொண்டிருந்தான். எனக்கும் இருந்தது. குடித்தேன். என்னுடைய காயங்களை கண்டு 'என்ன மீண்டும் மாத்தளனில் காவல்துறைக்கு அடிகுடுத்துட்டு வாற போல நாச்சியார் " என கணவர் கிண்டலடித்தது மனதுக்கு சுகமாக இருந்தது. காசை எடுத்து பத்திரமாக வைத்துவிட்டு வயல் வெளியில் தோண்டப்பட்ட சிறிய கிணறுகளைத்தேடி விரைந்தேன். பெண்கள் குளிக்கும் போது ஆண்கள் வராதபடியும் ஆண்கள் குளிக்கும் போது பெண்கள் போகாதபடியும் அவரவராகவே கட்டுப்பாடுகளை வகுத்திருந்தனர்.

வெட்டை வெளி. சரத்தை கட்டிக்கொண்டு குளிக்கத் தொடங்கினேன். பல பெண்கள் குளித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பகிடிகள் பெரிய பெரிய பகிடிகளாக இருந்தன. சண்டையும் சண்டைதான். மனிசன்மார் சண்டித்தனம் செய்ததில பலர் கர்ப்பமுற்றும் இருந்தனர். தடை ஊசிகள் வரத்து இல்லாமல் போட்டுது. இருந்தவையும் முடிந்து விட்டதால் கர்ப்பிணி பெண்கள் தொகையும் அதிகரிக்கத்தொடங்கியது.

அவர்களது பகிடிகள் கேட்க நன்றாகத்தானிருந்தது. என்னுடைய வாழ்வு முறையில் அப்பிடி பகிடி விடுமளவுக்கு எனது வளர்ப்புச் சூழலோ வந்த சூழலோ அப்படி இருக்கவில்லை. ஆதலால் அவை எனக்குப் புதிதான ரசனையாக இருந்தன. வண்டு ( வேவு விமானம்) சுற்றத்தொடங்கியதால் வேகமாக குளித்து விட்டு இருப்பிடத்தை அடைந்தேன்.

கணவர் சோறு சமைத்திருந்தார். மதியம் இரண்டு மணியாகிக் கொண்டிருந்தது. மரக்கறியை எடுத்து அரக்கப் பரக்க வெட்டத் தொடங்க தோழியின் மாமி கறியோடு வந்தார்.

'பிள்ளை சாப்பிட்டிட்டு பிறகு கறியை வையுங்கோ "

'இல்லையம்மா. நான் வேகமா கறி வைச்சிடுவன் " என்றேன்.

'சரி... சரி சாப்பிட்டிட்டு வேகமா கறிவைச்சு இரவுக்கு எங்களுக்கு கறி தாங்கோ ரீச்சர் " என மெல்லச்சிரித்தபடி கத்தியையும் மரக்கறிகளையும் வாங்கி வெட்டத் தொடங்கினார். 'நீங்கள் சாப்பிட்டீங்களோ ?

'ஓமடா நாங்கள் சாப்பிட்டோம்"

நாங்கள் மூவரும் சாப்பிட்டோம். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது தோழியும் வந்தாள். மாத்தளனில் இன்று நடந்த சம்பவத்தை சொன்ன போது ' மாத்தளனுக்கும் சஞ்சிக்கும் பொருத்தம் குறைவு. வேற இடத்திலதான் சமமந்தம் பார்க்கோணும் " என தோழி சொன்னாள். வாய்விட்டுச் சிரித்தோம்.

சாப்பிட்டு விட்டு கதைத்துக் கதைத்து கறி வைக்கத் தொடங்கினோம். சாப்பாடுகளையும் பத்திரமாக பதுங்கு குழிக்குள்தான் வைத்து காத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

மண் பதுங்கு குழியில் சாப்பாட்டிற்குள் மண் போகாதபடி பைகளாலும் சேலைகளாலும் சுற்றிப்பாதுகாக்க வேண்டியிருந்தது. (சாட்சியம் நீளும்)



# ஜவான்

## போராளியின் முழு உருவம்

■ காக்கா அண்ணை
(மு.மனோகர்)

'ஈழ முரசு' நாளிதழை புலிகள் பொறுப்பெடுத்த சில நாட்களில் நடந்த சம்பவம் இது. பாரவூர்தியொன்றில் காகிதாதிகள் கொண்டு வரப்பட்டிருந்தன. அவற்றை இறக்குவதற்கான தொழிலாளர்கள் வரவில்லை, எனவே அச்சகப் பணியில் ஈடுபட்டிருப்போரை அவற்றை இறக்குமாறு முகாமையாளர் சொன்னார். அவர்களில் 'குட்டித் தலைவன்' போல இருந்த ஒரு தொழிலாளி 'நாங்கள் இந்த வேலையெல்லாம் செய்வதற்கு வரவில்லை' என்று கூறி மறுப்புத் தெரிவித்தார். உடனே ஜவான் 'பிரச்சினையில்லை, நாங்கள் புலிகள் எந்த வேலையையும் எந்த நேரத்திலும் செய்யத் தயார்' என்று கூறி விட்டுத் தானே அவற்றைச் சுமந்து கொண்டு போய் களஞ்சியத்தில் அடுக்கினார்.

இந்த விடயம் சக தொழிலாளர்களுக்குத் தெரிய வரவே அவர்கள் உடனே ஓடி வந்து தாங்கள் இறக்குவதாக சொல்லி விட்டு இறக்கத் தொடங்கினர். இப்பணி முடிந்தாலும் 'வெளியில் இருந்து வருவோருக்கு எவ்வளவு கொடுப்பனவு வழங்குவீர்களோ அதனை இந்த தொழிலாளர்களுக்கு வழங்குங்கள்." என்று முகாமையாளரை வேண்டிக் கொண்டார் ஜவான்.

இதுதான் ஜவான். எந்த வேலையையும் எந்த நேரத்திலும் செய்யத் தயார். விடுதலைக்கான பணியில் ஈடுபட வந்த எமக்கு எதுவும் ஒரு பொருட்டில்லை என்பது அவரது கருத்து. அந்தக் காலத்தில் ஒவ்வொரு எழுத்தாகப் பொறுக்கிக் கோர்த்துத்தான் நாளிதழ்கள் வெளிவந்தன ஈழமுரசில் வெளியாகும் படங்களுக்கான புளொக்குகளை செய்யும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே இந்தத் தொழிலைச் செய்து வந்த புகைப்பட நிலையமொன்றில் இதனை பழகியிருந்தார் ஜவான். கிட்டு குடும்பத்தினர் அச்சகத் தொழில்தான் செய்து வந்தனர். எனவே அச்சகம் தொடர்பான வேலைகள் கிட்டுவுக்கு அத்துபடி. ஈழ முரசுக்காக அவர் செய்த ஆயத்தங்களில் ஒன்றுதான் புளொக் செய்யும் வேலையைப் பழக ஜவானை அனுப்பியமை. இந்த வேலையுடன் தன்னை மட்டுப்படுத்தவில்லை ஜவான். தேவையான போதெல்லாம் களமாடி வந்தார்.

யாழ். பண்ணையிலுள்ள பொலிஸ் விடுதிக்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் மீதான தாக்குதலில் ஜவானின் பங்கு முக்கியமானது. முதலில் முகாமுக்குள் நுழைந்த ஐந்து பேர் கொண்ட அணியில் அவரும் இடம்பெற்றிருந்தார். அதன் பின்னர் அடுத்த நாள் ஈழமுரசு ஆசிரியர் கோபு ஐயா இது சம்பந்தமாக ஜவானுடன் உரையாடினர். அடுத்தநாள் வெளிவந்த ஈழமுரசின் தலைப்பு 'ஐந்து ஏ.கேயுடன் முகாமைக் கைப்பற்றினோம். இளம்புலி ஜவான் தகவல்'

மொத்தத்தில் களமாடும் போராளி, யுத்தகள நிருபர், புளொக், தயாரிப்பாளர், நாட் டாமை (இந்தியாவில் இந்தச் சொல்லுக்கு அர்த்தம் வேறு) மற்றும் இன்னோரன்ன பணிகளைப் புரியும் ஒருவர்.

அங்குள்ள பணியாளர்களுடன் அவர் பழகிய விதங்களில் ஒருவர் என்ற எண்ணத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது. அதனால்தான் 1987 ஒக்ரோபர் 10 ஆம் நாள் கடமையிலிருந்த போது கைது செய்யப்பட்டோரில் எவரும் ஜவானைக் காட்டிக் கொடுக்க எண்ணவில்லை. அந்தப் பத்திரிகை நிறுவனத்துக்குக் குண்டு வைத்துத் தகர்த்த பின் அங்கிருந்த அனைவரையும் கைது செய்தனர் "ஜனநாயக' நாடாம் இந்தியாவிலிருந்து வந்த படையினர். இவ்வாறு கைது செய்யப்பட்டோரில் மற்றொருவர் உதவிஆசிரியர் சர்வேந்திரா (தற்போது கலாநிதி பட்டம் பெற்று நோர்வேயில் வசித்து வரும் இவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் பயின்றவர்) திலீபனின் உண்ணாவிரத நாட்களிலும் ஈழமுரசு உண்ணவிரத களம் இதற்கு ஆதரவாக நடைபெறும் போராட்டங்கள் என புகைப்படக் கருவியுடன் இரவு பகலாகத் திரிந்து இவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை.

• • •

கல்வியங்காட்டுக்கும் முள்ளியவளைக்குமான உறவு ஆழமானது. உமையாள்புரத்தில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து நடைபெற்ற சமர் முக்கியமானது. எதிர்பாராத விதமாக முல்லைத்தீவிலிருந்து வந்த கவச வாகனத்துடனும் புலிகள் போராட வேண்டியிருந்தது. இந்தச் சமர்தான் கிட்டுவின் ஆற்றலை வெளிப்படுத்தியது. அவரிடம் மட்டுமே ஜி3 துப்பாக்கி இருந்தது. ஒரு நீண்ட சமருக்குத் தேவையான வேறு ஆயுதங்கள் இருக்கவில்லை. மூன்று பகுதியினராகப் பிரிந்து பின்வாங்க வேண்டியிருந்தது. ஒரு மோட்டார் வாகனமொன்றில் செல்லக்கிளி அம்மான், அருணா, ராமு, ரஞ்சன், முதலானோர் முள்ளியவளைக்குச் சென்றனர்.

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்தே செல்லக்கிளி அம்மானின் தொடர்பு ஜவானுக்குக் கிடைத்தது. வன்னி பகுதிகளில் அவர் களமாடி வந்தார். அவ்வாறான களங்களில் ஒன்று கொக்காவில் பகுதியில் படையினர் மீது மேற்கொண்ட தாக்குதல். யாழ். குடாநாட்டில் இந்தியப் படையினருக்கு சிம்மசொப்பனமாக விளங்கியோரில் ஜவானும் ஒருவர். அக்காலத்தில் இவர் மேற்கொண்ட தாக்குதல்களின் பட்டியல் மிக நீண்டது. சுற்றி வளைப்புக்களில் இவரையும் ஏனைய போராளிகளையும் மக்கள் காப்பாற்றிய விதம் எங்கள் போராட்டத்தின் வலிமைக்குச் சான்றாகும்.

யாழ். ஹோட்டல் பரடைஸூக்கு வெளியே (கஸ்தூரியார் வீதி) நின்ற இந்தியப் படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பி வருகையில் துவிச்சக்கரவண்டியில் பாடசாலை சீருடையுடன் வந்த மாணவன் ஒருவன் 'ஜவானண்ணை ஏறுங்கோ' என்று அழைத்து பல ஒழுங்கைகளுக்குள்ளால் கொண்டு சென்று கோண்டாவிலில் விட்டார். அந்த மாணவன் யார் என்று கேட்கும் நிலையில் சூழல் இருக்கவில்லை. அவனை அதன் பிறகு ஒருபோதும் காணவில்லை என்றார் அவர். நல்லூர் பகுதியொன்றில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பில் இவரையும் மேலும் சில போராளிகளையும்

(13ஆம் பக்கம் பார்க்க)



# ஹை ஹீல்ஸ் ஆபத்துக்கள்



பென்சில்பிட் ஜீன்ஸ், இடுப்பைப் பிடிக்கும் ஸ்கர்ட், உள்ளே காற்று புகாத அளவுக்கு நெருக்கடியான ரீசேர்ட் இதெல்லாம் பஷன் என்று சொல்லும் பெண்கள் தங்களை வெயிட் பார்ட்டியாக காட்டிக்கொள்வதில் கவலையும் ஹைட் பார்ட்டியாக காட்டிக்கொள்வதில் பெருமிதமும் கொள்கிறார்கள். ஆகவே, ஹை ஹீல்ஸ் செருப்புகளை மட்டும் விட்டுவைப்பார்களா என்ன? இன்று பெரும்பாலான பெண்கள் ஹைஹீல்ஸ் செருப்புகளை மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

வீட்டை விட்டு வெளியே செல்லும் போது முள்ளும் கல்லும் படாமல் இருக்க காலில் அணிந்து கொள்வதற்காக உருவானதுதான் காலணி. ஆனால் இன்று உலகமே பஷன் மயமாயிற்றே! மொடலிங் பெண்கள் பஷனாக பயன்படுத்தும் பொருட்களை அன்றாடம் முக்கால்வாசி பேர் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். குறிப்பாக கூர்மையான முனைகளைக் கொண்ட பொயின்டட் ஹீல்ஸ், ஹை ஹீல்ஸ் செருப்புகளை சாதாரணமாகவே பயன்படுத்துகிறார்கள்.

ஹை ஹீல்ஸ் அணிவதில் 60 சதவீதப் பெண்கள் ஆர்வமாக இருக்கிறார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் 90 வீதத்துக்கு மேற்பட்ட பெண்கள் முதுகுத்தண்டில் வலி, மூட்டு வலி, இடுப்பு வலி, காலில் ஆணி, கால் சுளுக்கு முதலான பாதிப்புகளால் அவதிப்படுகிறார்கள் என்பதை ஆய்வுகள் நிரூபித்திருக்கின்றன.

பெண்கள் ஹை-பை எனும் பெயரில் நடைக்கும், உடைக்கும் பொருத்தமே ஹை ஹீல்ஸ்தான் என்று வளைய வருவது பெரிய அளவில் உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள். பெரும்பாலான வீடுகளில் ஆடைகளுக்கு அலமாரி போல ஹை ஹீல்ஸ் வைக்கவும் ஒரு அலமாரி ஒதுக்கப்படுகிறது. குள்ளமாக இருந்தால் ஹை ஹீல்ஸ் போட்டு உயரமாகக் காட்டலாம். உயரமாக இருந்தால் ஹை ஹீல்ஸ் போட்டு அழகை இன்னும் கூட்டலாம் என்று யார் சொல்லிக்கொடுத்தார்களோ தெரியவில்லை.

அழகு என்பது ஆரோக்கியத்துடன் சம்பந்தப்பட்டது. ஆரோக்கியக் குறைவை ஏற்படுத்தும் எதுவுமே அழகு கிடையாது. ஆரம்பத்தில் ஹை ஹீல்ஸ் செருப்புகள் ஏற்படுத்தும் குதிகால் வலியும், கால் சுளுக்கும் கெண்டைக்கால் வலியும், வீக்கமும் புது செருப்பு கடிக்கும் என்பதாகவே நினைத்துக் கொள்கிறார்கள். பிறகுதான், எவ்வளவு பெரிய பின்விளைவுகளைத் தருகின்றன என்பதை உணர்ந்து வேதனைப்படுகிறார்கள்.

குதிகால் உயர செருப்புகளை அணிவது தகுதியை மிகைப்படுத்திக் காட்டும் எனும் தவறான முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால் இது ஆரோக்கியமான விஷயமல்ல. .

அதிக உயரம் கொண்ட ஹை ஹீல்ஸ்கள் அணிந்தால் வேகமாக நடக்கும் போது தடக்கென்று கால் நொடிப்பதற்கு, சுளுக்கிக் கொள்வதற்கு, கால் நரம்புகளோ எலும்போ பாதிப்பதற்கு எக்கச்சக்க வாய்ப்புகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல அவசர காலங்களில் ஸ்லோ மோஷனில் கூட ஓடமுடியாது. ஏனெனில் நம் உடலின் மொத்த எடையையும் கணுக்கால் தாங்குகிறது. கீழே விழும்போது கணுக்கால் எலும்பில் முறிவு ஏற்பட்டால் நீண்ட நாள் சிகிச்சை பெறவேண்டி யிருக்கும்.

சாதாரணமாக தட்டையான அல்லது சற்றே உயரமிக்க செருப்புகள் நம் உடலில் எவ்விதமான பாதிப்புகளையும் ஏற்படுத்தாது. சமநிலையில் நடக்கும் போது எலும்புகளும் மாற்றங்கள் இல்லாமல் இருக்கும். ஆனால் ஹைஹீல்ஸ் அணியும் போது பாதங்களின் பின்பகுதியான குதிகால் தரையில் படாமல் மேல் நோக்கி நின்றபடி இருக்கும். உடல் சமநிலையில் இல்லாத இத்தன்மையில் உடலில் எலும்பும் அதற்கேற்ப வளைந்து கொடுக்க வேண்டியதாக இருக்கும். அப்போது நமது உடலின் மொத்த எடையையும் முன்பாதங்கள் தாங்கும்படி இருப்பதால் இயல்பாகவே முன்னோக்கி நடப்போம். இதனால் நமது உடல் எடையும் முன்னுக்கு தள்ளப்படுகிறது. உடலின் சமநிலை இதனால் தடுமாறு கிறது. தொடர்ந்து ஹை ஹீல்ஸ் அணிந்து கொண்டே இருந்தால் கால் சுளுக்கு, கால் ஆணிகள், கொப்புளங்கள் ஏற்படுவதோடு நம்மையும் அறியா மல் முதுகுத்தண்டிலும் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது.

முதுகுத்தண்டு பாதிப்புகள் நாளடைவில் அழுத்தத்தை உண்டாக்கி மூட்டு வலியையும் உண்டாக்குகிறது. இயற்கைக்கு மாறாக அதிகமாக வளைவதால் விரைவிலேயே கூன் தோற்றம் உண்டாகும் என்றும் அதிர்ச்சிதருகிறார்கள் மருத்துவர்கள். மேலும் ஹை ஹீல்ஸ் அணியும் போது கால்விரல்கள் இறுகு வதால் அழுத்தம் ஏற்பட்டு சீரான இரத்த ஓட்டம் தடைபடும், குதிகால்களில் உள்ள தசைநார்கள் சுருங்கிவிடும் என்றும் எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள்.

எனக்குத்தெரிந்த பெண்ணுக்கு கடந்த 2 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. பேஷன் உலகில் புதிய டிரெண்ட் என்ன என்று அவளைத்தான் கேட்போம். அனைத்தையும் விரல் நுனியில் அப்டேட்டாக வைத்திருப்பாள். அவள் அணியும் ஆடை, அலங்காரமும் அதற்குப் பொருத்தமாக அணியும் ஹை ஹீல்ஸ் செருப்புகளையும் ரசிக்க, எங்கள் அபார்ட்மென்ட்டில் ஒரு கூட்டமே உண்டு. அவள் நடக்கும் போது இமைதட்டாமல் நானும் பார்த்திருக்கிறேன். 'இவ்ளோ பெரிய ஸ்டூலை மாட்டிக்கொண்டு நடக்கிறாளே. எங்கேனும் விழுந்து விடுவாளோ' என்று ஒரு வித அச்சத்தோடு, பார்த்திருக்கிறேன்.


ஒருநாள் மகப்பேறு மருத்துவரிடம் போனபோது அவளும் சிகிச்சைக்கு வந்திருந்தாள். இயல்பாகவே கண்கள் அவளது கால்களைப் பார்த்தது. பார்த்தேன். சற்றே உயரமான செருப்பை அணிந்திருந்தாள். நலம் விசாரிப்புக்குப் பிறகு அவள் வந்த காரணத்தைத் தெரிவித்தாள். உயர்வகையான ஹை ஹீல்ஸ்கள் அணிந்ததால் இடுப்புவலியும் அதைத் தொடர்ந்து கருப்பையில் பாதிப்பும் ஏற்படும் அளவுக்கு தீவிரமாகிவிட்டதாகவும் தெரிவித்தாள். தற்போது குழந்தை வேண்டி சிகிச்சை பெற்றுவருவதாகக் கூறினாள். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

ஹை ஹீல்ஸ் அணிவது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல என்ற எச்சரிக்கைகள் பரவி வந்தாலும் வெளிநாடு களில் உள்ள ரெட்கார்ப்பெட் நிறுவனங்கள், பெண்கள் ஹைஹீல்ஸ் அணிந்து வேலைக்கு வர வேண்டும் என்றே விதிமுறைகளை வகுத்திருக்கின்றன.

"எப்போதாவது ஹை ஹீல்ஸ் அணிவதையே வெறுப்பவள் நான். தினமும் வேலைக்குச் செல்லும்போது அணிய வேண்டுமா" என்று ட்வீட்டில் குமுறியிருக்கிறார் யூமி இஷிகாவா என்னும் விளம்பர மாடல் பெண்மணி. இவர் உருவாக்கிய கூமரவழழ என்னும் ஹேஷ்டேக் பெண்கள் மத்தியில் பிரபலம். பல பெண்கள் ஹைஹீல்ஸ் அணிந்ததால் கால்களில் ஏற்பட்ட புண்களின் படங்களை அதில் பதிவிட்டிருந்தார்கள்.

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பது போல ஹை ஹீல்ஸ் தரும் அதிகப்படி யான வலிக்குப் பிறகே உணர்ந்து புலம்புகிறார்கள்.

உணர்ந்தால் சரி!



# உப்பு மீது ஈர்ப்பு ஏன்?

சாப்பிடும்போது அனைவரும் அமைதியாகச் சாப்பிட, ஒருவர் மட்டும் அடிக்கடி உணவில் உப்பு சேர்க்கிறார் என்றால், அவருக்குச் சரியான அளவைவிட உப்பு அதிகம் தேவைப்படுகிறது என்று அர்த்தம். இதை ஆங்கிலத்தில் 'சோல்ட் கிரேவிங்' (Salt Craving) என்கிறார்கள். உணவில் அதிகமாக உப்பு சேர்த்துக்கொள்ள பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அவை...

**சோடியம் பற்றாக்குறை:**

ஒருவரது உடலில் சோடியத்தின் அளவு குறைவாக இருப்பதே இதற்கு முக்கிய காரணம். இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணவிட்டால், நரம்பு தொடர்பான குறைபாடுகள், உயர் இரத்த அழுத்தம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

ஒருவருக்கு வழக்கத்துக்கு அதிகமாக வியர்க்கிறது என்றால், அவரது உடலில் நீர்ச்சத்து மற்றும் சோடியத்தின் அளவு குறைந்திருக்கலாம். மனஅழுத்தம், அதிக உடல் உழைப்பு அல்லது உடற்பயிற்சி செய்வதால்கூட வியர்வை அதிகரித்து சோடியம் வெளியேறும். எனவே, உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் பயிற்சிகளின்போது அதிகமாக நீர் அருந்த வேண்டும்.

**ஹோர்மோன்:**

சிறுநீரகங்களின் மேற்பகுதியிலிருக்கும் அட்ரினல் சுரப்பிகள் போதுமான அளவு ஹோர்மோன்களைச் சுரக்காதபோது, உடலிலிருக்கும் நீர்ச்சத்தின் அளவு சமச்சீர்த் தன்மையை இழந்துவிடும். இதனால், சிறுநீருடன் அதிகமாக சோடியம் வெளியேறுவதால் நீர்ச்சத்து இழப்பு, அடிவயிற்றில் வலி போன்றவை ஏற்படும். ஹோர்மோன்கள் சுரக்கவில்லையென்றால், சிறுநீரகத்தால் சோடியத்தின் அளவை நிர்வகிக்க முடியாமல் போய் உப்பின் மீது ஈர்ப்பு ஏற்படும்.

**மாதவிடாய்:**

பெண்களுக்கு மாதவிடாய் சுழற்சியின்போது ஹோர்மோன்களில் மாற்றம் ஏற்படும். மாதவிடாய் மற்றும் கருமுட்டை முதிர்ச்சியடைந்து வெளியேறும் நிகழ்வு ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெறும்போது ஹோர்மோன்கள் சுரக்கும். அப்போது உணவில் அதிகமாக உப்பு எடுத்துக்கொள்ளத் தூண்டும். ஹோர்மோன்கள், சுவை அரும்புகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதே காரணம்.


**போதைப் பொருட்கள்:**

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள், அவற்றிலிருந்து விடுபட்டு, அந்தப் பழக்கத்தை முழுமையாகக் கைவிடும்போது, உப்பை அளவுக்கு அதிகமாக உணவில் சேர்ப்பார்கள். மூளைக்குள் இன்பத்தை உணரும் மையம் தூண்டப்படுவதாலேயே உப்பை அதிகமாக எடுத்துக்கொள்ளத் தோன்றும்.

**தீர்வுகள்:**

உப்பை திடீரென அதிக அளவில் சேர்க்கும் பழக்கம் ஏற்பட்டால், அதற்கான காரணங்களைக் கண்டறியும் மருத்துவ பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். உப்பின் அளவையும், உப்புச் சுவை அதிகமாக இருக்கும் பதப்படுத்திய உணவுகளை உட்கொள்வதையும் குறைத்துக்கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு 2,300 மி.கி (23 கிராம்) அளவுக்கு மேல் உப்பைப் பயன்படுத்தக் கூடாது.

# ஆரோக்கிய நாடுகள் முதலிடம் யாருக்கு?




'உலகில் மிகவும் ஆரோக்கியமான நாடு எது?' என்பது குறித்து 'புளூம்பெர்க்' அமைப்பு அவ்வப்போது விரிவான ஆய்வுகளை நிகழ்த்தி, பல்வேறு நாடுகளை ஆரோக்கியத் தரவரிசையில் அடுக்கி வருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் வாழும் மக்களின் வாழ்நாள், நீரின் தூய்மை, ஒட்டுமொத்த சுகாதாரம் போன்றவற்றைப் பொறுத்து அவற்றுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைக்கின்றன. புகைபிடிக்கும் பழக்கம், உடல் பருமன் போன்றவற்றுக்கு மதிப்பெண்கள் கழிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது எந்தெந்த நாடுகள் ஆரோக்கியமானவை என்பது தீர்மானிக்கப்படுகிறது.




2019 ஆம் ஆண்டுக்கான இந்தப் பட்டியலில் 96.56 புள்ளிகள் பெற்று முதல் இடத்திலுள்ள நாடு, ஸ்பெயின். அடுத்த நான்கு நாடுகள் இத்தாலி, ஐஸ்லாந்து, ஜப்பான், சுவிற்சர்லாந்து. இதில், சுவையான விடயம் என்னவென்றால், முதல் பத்து இடங்களில் பாதிக்கு மேல் ஐரோப்பிய நாடுகள், ஆனானப்பட்ட அமெரிக்காவுக்கு 35-வது இடம்தான்!


நம் நாட்டின் நிலை என்னவென்று யோசிக்கிறீர்களா...? 56 நாடுகள் கொண்ட பட்டியலில் இலங்கைக்கு இடமே இல்லை!



# உணவே மருந்து

## மணித்தக்காளி சோறு

வீரியம் அதிகமுள்ள மருந்துகளால் ஏற்படும் உடல் உபாதைகள், பின்விளைவுகள், ஒவ்வாமையை ஏற்படுத்தும் எதிர்ப்புசக்தி மருந்துகள் போன்றவை ஏற்படுத்தும் பாதிப்புகளை முறிக்கும் சக்தி, மணித்தக்காளிக்கு உண்டு. தொண்டையில் ஏற்படும் தொந்தரவுகளுக்கு சிறந்த தீர்வு மணித்தக்காளிச் சாறு. மனஅழுத்தம் அதிகமாக இருப்பவர்களுக்கும், அதிக வெப்பமான சூழலில் வேலை செய்பவர்களுக்கும் வயிற்றுப்புண் வர வாய்ப்பு அதிகம். இவர்கள், வாரம் ஒருமுறை ஒரு கைப்பிடி அளவு மணித்தக்காளி சாப்பிடுவது வயிற்றுப்புண்ணைத் தடுக்கும். வாய்ப்புண்ணையும் போக்கும். குரல்வளத்தை மேம்படுத்தும்.



**தேவையானவை:**

மணித்தக்காளி இலை : ஒரு கப்
சோறு : ஒரு கப்
துருவிய தேங்காய்: கால் கப்
செத்தல் மிளகாய் : 2
எண்ணெய் : 2 மே.கரண்டி
நெய் : ஒரு மே.கரண்டி
கடுகு : கால் மே.கரண்டி
உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு : தலா அரை மே.கரண்டி
உப்பு : தேவையான அளவு
கட்டி பெருங்காயம் : சிறிது

செய்முறை: மணித்தக்காளி இலையை சுத்தம் செய்து, பொடியாக நறுக்கவும். அடுப்பில் சட்டியை வைத்து, எண்ணெய் விட்டு சூடானதும், கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, பெருங்காயம் போட்டு தாளிக்கவும். இதனுடன் செத்தல் மிளகாய், நறுக்கிய மணித்தக்காளி இலையை சேர்த்து வதக்கவும். சிறிதளவு வதங்கியவுடன், உப்பு சேர்க்கவும். இலை அவிந்ததும், துருவிய தேங்காய் சேர்த்துக் கிளறவும். கடைசியாக சோறு மற்றும் நெய் சேர்த்து நன்கு கிளறி, பரிமாறவும்.

பலன்கள்: பயன்படுத்தப்பட்ட தேங்காய்த் துருவல், உளுத்தம் பருப்பு இரண்டும்கூட வயிற்றுப் புண்ணைச் சரிசெய்ய உதவும். இவை அனைத்துமே, உடலுக்கு அதிகக் குளிர்ச்சியைத் தரக்கூடியவை. குளிர்ச்சி நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொள்வது, சமிபாட்டுப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். அதற்காகத்தான் செத்தல் மிளகாய் சேர்க்கப்படுகிறது.

# வாரபலன்

### மேடம்

இவ்வாரம் பணியில் தொந்தரவுகள் இருந்தாலும் செவ்வனே செய்து முடிப்பீர்கள். உடல் சோர்வு நீங்க தியானம், யோகா போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளலாம். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிரிகளின் பலம் குறையும்.

### துலாம்

இவ்வாரம் பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் நிறையும். மனதிற்கினிய செய்திகள் வந்து சேரும். எதிரிகளாலும் நன்மை அடைவீர்கள். பேசும்போது கடினமான வார்த்தைகளை பேச வேண்டாம்.

### ரிஷபம்

இவ்வாரம் மன அமைதி கிட்டும். பணவரவு சீராக இருக்கும். வேலைகளை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிப்பீர்கள். வியாபாரிகளுக்கு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். புதிய முதலீடுகளில் ஈடுபட்டு லாபம் அடைவீர்கள். நெருங்கிய நண்பர்கள் மூலமாகவே சில இடையூறுகள் ஏற்படலாம்.

### விருச்சிகம்

இவ்வாரம் தடைகள் பல விலகும். யோகபாக்கியங்கள் அதிகரிக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். கனவுகளை நனவாக்க முயலுங்கள். பழைய கடன்களைச் செலுத்துங்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்கவும்.

### மிதுனம்

இவ்வாரம் தர்ம சிந்தனைகள் மேலோங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகள் நிலவும். திட்டமிட்ட வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பேச்சிலும் பயணத்திலும் கவனமாக இருக்கவும். சிறுமுயற்சிகளும் இரட்டிப்பு வெற்றியை கொடுக்கும்.

### தனுசு

இவ்வாரம் உங்கள் செல்வாக்கு உயரும். தொழிலில் தடை கள் விலகி நன்மைகள் அதிகரிக் கும். உறவினர்களாலும் நண்பர்களாலும் காரிய அனுகூலம் ஏற்படும். பயணங்களின் போது எச்சரிக்கை தேவை. உத்தியோகஸ்தர்கள் சிறப்பாகப் பணியாற்றலாம்.

### கடகம்

இந்தவாரம் எடுத்த காரியங்களில் வெற்றியடைவீர்கள். தொழிலில் நிலவிய தடைகள் நீங்கும். நன்மைகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும்.நம்பிக்கையுடன் ஆன்மிகப் பணியில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தருக்கு நன்மை தரும் வாரம்.

### மகரம்

இவ்வாரம் குடும்பத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும். நீண்டகால எண்ணங்கள் ஈடேறும். கடின உழைப்பிற்குப் பிறகே வெற்றி தேடி வரும். உடன்பிறந்தோர் உதவியாக இருப்பார்கள். உத்தியோகஸ்தர்கள் திட்டமிட்ட வேலைகளை வெற்றிகரமாக முடிப்பார்கள்.

### சிம்மம்

இவ்வாரம் செயல்களைத் திட்டமிட்டுச் செய்து முடிப்பீர்கள். தெய்வீகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துப் பேசவும். தேக ஆரோக்கியம் நன்றாகவே இருக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா சென்று வருவீர்கள்.

### கும்பம்


இவ்வாரம் மனதில் சிறு சலிப்புகள் ஏற்பட்டாலும் விரைவாக அதிலிருந்து விடுபடுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் தென்படும். ஆன்மீகத்தில் ஈடுபட்டு மன பலம் பெறுவீர்கள். பழைய கடன்களை திருப்பிச் செலுத்துவீர்கள் உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும்.

### கன்னி


இவ்வாரம் திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படும். இருப்பினும் மனஉறுதியுடன் அவற்றைத் தகர்த்தெறிவீர்கள். சிலருக்கு புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும். எதிர்கால முன்னேற்றத்திற்கு எடுக்கும் முயற்சிகள் பலனளிக்கும்.

### மீனம்

இவ்வாரம் பொருளாதார சூழல் நன்றாகவே இருக்கும். எடுத்த காரியங்கள் வெற்றியடையும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவச் செலவுகள் செய்ய நேரிடலாம். திட்டமிட்டு வேலைகளை மிகவும் கவனத்துடன் செய்யவும்.



வவுனியா விபுலானந்தர் கல்லூரியில் சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபுவின் சிலை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.



யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. கல்வி சார் ஊழியர்களுக்கும் கல்வி சாரா ஊழியர்களுக்கும் இடையே பாராபட்சமாக நிர்வாகம் நடந்து கொள்வதைச் சுட்டிக்காட்டியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக சங்கத்தினர் தெரிவித்திருந்தனர்.





தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கும் நிகழ்வில் பச்சிலைப்பள்ளிபிரதேசச் செயலகம் தேசிய இடத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளது. விருதினைப் பிரதேசச் செயலாளர் பெற்றுக் கொண்டார்.




இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு நவீன மயமாக்கல் புதிய உறுப்பினர்களை வலுப்படுத்தும் திட்டம் எனும்" பொருளில் வவுனியா மாவட்டத்தில் அரசியலில் பெண்களின் வகிபாகமும், விழிப்புணர்வுச் செயலமர்வும் இடம்பெற்றுள்ளது.



யாழ்.இந்தியத் தூதரகத்தின் நிதிப் பங்களிப்பில் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் முது தமிழ் புலவர் ஔவையார் நினைவாக தமிழ் பண்பாட்டுவிழா நடத்தப்பட்டுள்ளது.

# எல்லாவற்றுக்கும் காரணம் உண்டு



அசோக் என்பவன் தான் இருக்கும் ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு செல்ல நான்கு மைல் நடந்துதான் செல்ல முடியும். அவன் காலை கிளம்பினான். செல்லும் வழியில் வயலில் பூசணிக்கொடிகள் பரவியிருந்தன. ஒவ்வொன்றிலும் பல பூசணிக்காய்கள் காய்த்திருந்தன. அதைப் பார்த்தவாறு நடந்தான்.

சிறிது நேரத்தில், வெயிலின் கொடுமை அதிகமாயிற்று. அசோக்கிற்கு வியர்வை வழிந்தோடியது. அவன் களைப்பானான். சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு செல்ல தீர்மானித்து. அரசமரம் ஒன்றின் அடியில் சென்று அமர்ந்தான். பின்பு நிமிர்ந்து பார்த்தான். மரத்தில் சிறு சிறு காய்கள் நிறைய இருந்தன.

உடனே, 'கடவுள் ஏன் அறியாமல் சிறிய பூசணிக்கொடிக்கு பெரிய காயையும்.. பெரிய இந்த மரத்திற்கு சிறிய காய்களையும் படைத்துள்ளார் ' என்று நினைத்தான். அப்போது மரத்திலிருந்து சிறிய காய் ஒன்று உதிர்ந்து அவன் தலையில் விழுந்து. அவனுக்கு சற்று வலியை ஏற்படுத்தியது.

உடனே, 'கடவுள் காரணமில்லாமல் இப்படி படைக்கவில்லை.இந்த மரத்தில் பூசணி அளவு காய்கள் இருந்திருந்தால்..இவ்வளவு நேரம் என் தலை போயிருக்குமே' என உணர்ந்தான். தனது அறிவீனத்திற்கு வெட்கமடைந்தான்.

இறைவன் காரணமில்லாமல் எந்த ஒன்றையும் செய்வதில்லை, படைப்பதில்லை.




# அறிவோம் தெளிவோம்

## நோபல் பரிசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கடந்த 1833 ம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 21 ம் திகதி, சுவீடனில் பிறந்த எல்பிரட் நோபல், ஒரு வேதியியலாளராகவும், பொறியியலாளராகவும் தன்னை வளர்த்துக்கொண்டார். பின்னர், இரும்பு ஆலையை நடத்திவந்த நோபல், அதனை பெரும் ஆயுத உற்பத்தி தொழிற்சாலையாக மாற்றி பலவித புகையற்ற இராணுவ வெடிபொருட்களுக்கு முன்னோடியான பொலிஸ்டிக்கை கண்டுபிடித்தார். இது பின்னாளில் யுத்த நடவடிக்கைகளுக்கு பல்வேறு ஆயுதங்களை உருவாக்குவதங்கு அடித்தளம் அமைத்தது. இதைப்பயன்படுத்தி தனது வாழ்நாளில் நோபல் பெருமளவான செல்வங்களை சேர்த்தார். அவரது வருமானத்தின் பெரும்பகுதி அவர் கண்டுபிடித்த 355 புதிய கண்டுபிடிப்புக்களால் கிடைத்தவையாகும். அவற்றில் முக்கியமான கண்டுபிடிப்பு, டைனமைட் ஆகும் இது தற்போதைய உலகத்தில் உயிர்களை பலியெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் தலைமை இயக்குனராக உருவெடுத்துள்ளது. இதனை கண்டுபிடித்த பின்னர் நோபல், உலகளாவிய ரீதியில், பேசப்பட்ட போதிலும், இவரது கண்டுபிடிப்பு, இவரை மரணத்தின் வியாபாரி என சொல்லும் அளவிற்கு, இவரை வளர்த்துவிட்டது.

மீதி அடுத்த வாரம்...

# உயர்ந்தவர்கள்

அமெரிக்காவின் ஜோர்ஜ் வாஷிங்டனுக்கு அடுத்தபடியாக இரண்டாவது ஜனாதிபதியாக ஆபிரகாம்லிங்கன் போற்றப்படுகிறார். ஆபிரகாம்லிங்கன் படுகொலை செய்யப்பட்ட பின்னர்,



அவர் அமெரிக்க மக்களால் ஒரு தேசிய தியாகியென மரியாதை செய்யப்படுகிறார். மேலும் அடிமைத்தனத்தை ஒழிக்க போராடியதால் மக்களால் அவர் , ஒரு சிறந்த சுதந்திர போராளியாக வணங்கப்படுகிறார். தனக்கு கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பை விட தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன் தான் சமூகத்தில் முன்னேற முடியும்! எனும் வாக்கியத்தை கூறி, உலகில் பலருக்கு முன்னோடியாக திகழ்ந்த ஆபிரகாம்லிங்கன், உலகை மாற்றியவர்களில் ஒருவர்......




# ஆங்கிலம் கற்போம்

- இப்பொழுது என்ன செய்துக்கொண்டிருக்கிறாய்?
  What are you doing now?
- Are you speaking in English?
  நீ ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கின்றாயா ?
- Yes, I am speaking in English. (I'm)
  ஆம், நான் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கின்றேன்.
- No. I am not speaking in English. (I'm not)
  இல்லை, நான் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கவில்லை.
- Are you going to school?
  பாடசாலைக்கு நீ போய்க்கொண்டிருக்கின்றாயா ?
- Yes, I am going to school. (I'm)
  ஆம், நான் பாடசாலைக்கு போய்க்கொண்டிருக்கின்றேன் .
- No, I am not going to school. (I'm not)
  இல்லை, நான் பாடசாலைக்கு போய்க்கொண்டிருக்கவில்லை.

# ஆத்திசூடி அறிவோம்




**1. சேரிடம் அறிந்து சேர்**
நீ பழகும் நபர்கள் நல்ல குணங்கள் உடையவர்களா என நன்கு ஆராய்ந்து பின்பு அவர்களுடன் பழகு.

**2. சையெனத் திரியேல்**
பெரியோர் 'சீ' என வெறுக்கும் படி வீணாய்த் திரியாதே.

**3. சொற் சோர்வு படேல்**
பிறருடன் பேசும் பொழுது மறந்தும் குற்றமுண்டாகப் பேசாதே.

**4. சோம்பித் திரியேல்**
முயற்சியின்றிச் சோம்பேறியாகத் திரியாதே

**5. செய்வன திருந்தச் செய்**
செய்யும் செயல்களை தவறோ குறையோ ஏதும் இல்லாமல் செய்யவும்.

# சின்னச் சின்னச் செய்திகள்

- முதன் முதலில் கேள்விக் குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தின் மொழி தான்.
- கைரேகையை வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
- பசுமைப் புரட்சி என்று கேள்விப் பட்டிருப்போம். அது என்ன இளஞ்சிவப்புப் புரட்சி. அதாவது மருந்து வகைகள் உற்பத்தியை பெருக்குவது ஆகும்.
- நீலப் புரட்சி என்பது மீன்உற்பத்தியை பெருக்குவதும், வெண்மைப் புரட்சி என்பது பால் உற்பத்தியைக் குறிப்பதும் ஆகும்.
- மஞ்சள் புரட்சி என்பது எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை பெருக்குவது ஆகும்.

# இனிய வாழ்வுக்கு வீரபத்ர வழிபாடு



சர்வலோகங் களின் நன்மைக்காக சிவபெருமான் அநேக அசுரர்களை வென்றடக்கி அருள் புரிந்துள்ளார். அதற்காக அவர் புரிந்த வீரச்செயல்கள், 'அட்ட வீரட்டம்' என்று போற்றி வகைப்படுத்தப் படுகிறது. அவற்றுள் ஆறில் சிவபெருமான் நேரடியாகவே எமன், அந்தகன், சலந்தரன், திரிபுராதிகள், கஜாசுரன், மன்மதன் ஆகியோரை அழித்தும் உயிர்ப்பித்தும் அருள்புரிந்தார்.


மற்ற வீரச்செயல்களில் ஈசன் நேரடியாகச் செல்லாமல், தன் அருள்பார்வையில் உண்டான உக்கிர குமாரர்களான வீரபத்திரன், வைரவர் ஆகியோரை அனுப்பி முறையே தட்சன், பிரம்மன் ஆகியோரைத் தண்டித்தார் என்கின்றன புராணங்கள்.

பழந்தமிழர்கள், போர் புரிவதை ஒரு கலையாக நேர்த்தியுடன் செய்துவந்தவர்கள். போர் நெறிகளை ஒழுங்குடன் பின்பற்றியவர்கள். ஒவ்வொரு போர் நடவடிக்கைக்கும் ஒவ்வொரு பூமாலையை அணிந்து அடையாளப்படுத்திய வர்கள்.

அந்த வகையில், எவர் வரினும் அஞ்சாது அதிரடியாகப் போர் புரியும்போது அணியும் மாலை தும்பை மாலை. அதிஉக்கிரரான மகா வீரபத்திரரும், 'எவர் வரினும் தர்மம் காக்க அதிரப்பொருது வெற்றி காண்பேன்" என்று போர்க்களத்தில் நிற்பவர். ஆகவே, அவருக்குத் தும்பை மாலை விருப்பமானது.

வீரபத்திரர் மற்றும் பத்திரகாளிக்குத் தும்பைப்பூ மாலை அணிவித்து வழிபட்டால், தர்மத்துக்கு எதிரான எதிரிகளை அழித்து நம்மைக் காப்பார்கள் என்பது நம்பிக்கை. துன்பத்தை நீக்கி இன்பத்தை அருள்பவர் வீரபத்திரர்.

தட்ச யாகத்தின்போது வீரபத்திரர் தூய வெண்ணிற ஆடைகளை அணிந்து போர் புரியச் சென்றார். எனவே வீரபத்திரருக்குக் கரையில்லாத வெண்மை நிற ஆடையை அணிவிப்பது சிறப்பானது. கோபத்தால் கனன்றுகொண்டிருக்கும் வீரபத்திரரை சாந்தப் படுத்த, அவருக்கு வெண்ணெய்க் காப்பு சாத்துவதும் நன்மையை அளிக்கும். வெண்ணெய் மீது பச்சை இலைகள், வண்ண சரிகைகள் கொண்டு அலங்கரிப்பதும் சிறப்பானது. இதனால் நம் வாழ்க்கை இனிமையாக மாறும் என்கிறார்கள்.



# இறைவன் எதிர்பார்ப்பை மீறாதிருப்பீராக...!

நற்செய்தியில் இயேசு, இஸ்ரேல் மக்களை திராட்சைத் தோட்டத்துக்கு ஒப்பிடுகிறார். திராட்சை தோட்டத்தைப் பராமரிக்கத் திராட்சைத் தோட்ட உரிமையாளர் என்னவெல்லாம் செய்வாரோ, அது போன்று ஆண்டவராகிய கடவுள், இஸ்ரேல் மக்களை அடிமைத்தன வீடாக எகிப்திலிருந்து விடுவித்து, பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்தை அவர்களுக்கு வழங்கினார்.

அது மட்டுமல்லாமல், அவர்களை வழிநடத்த இறை வாக்கினர்களையும் நீதித்தலைவர்களையும் அனுப்பி வைத்தார். இப்படியெல்லாம் இஸ்ரேல் மக்களுக்கு நன்மைகளைச் செய்த இறைவன், அவர்களிடமிருந்து பலனை எதிர்பார்ப்பதுதானே முறை. ஆனால், அவர்கள் பலனைக் கொடுக்காமல், பலனைக் கேட்கச் சென்ற எல்லாரையும் பிடித்து அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

இறை வாக்கினர்களையும் இறையடியார்களையும் பிடித்துத் துன்புறுத்திய இஸ்ரேல் மக்களிடம், ஆண்டவராகிய கடவுள், தன் மகனை அனுப்பினாலாவது உரிய பலனைத் தருவார்கள் என்று இயேசுவை அனுப்பி வைக்கிறார். அவர்களோ அவரைப் பிடித்து, வெளியே தள்ளிக் கொல்கிறார்கள் (எபி 13: 12-13). இதனால் சினம்கொள்ளும் கடவுள் யூதர்களிடம் இருந்த இறையாட்சியைப் புறவினத்து மக்களுக்குக் கொடுக்கிறார். கடவுளிடமிருந்து ஏராளமாக ஆசி பெற்ற இஸ்ரேல், அதற்கான பலனைத் தந்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் பலன்தராமல் போனதால் அவர்களிடமிருந்த வாய்ப்பு பறிக்கப்பட்டு, வேறு மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

'நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது" என்று யோவான் நற்செய்தியில் இயேசு கூறுகிறார். யூதர்களுக்குக் கனி கொடுப்பதற்கான எல்லா வாய்ப்பு வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டன. அப்படியிருந்தும் அவர்கள் கனி கொடுக்காமல் போனதால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு வேற்றின மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. எனவே, கனிகொடுக்காமல் இருக்கும்போது, யூதர்களுக்கு ஏற்பட்ட நிலைதான் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் என்பதை மறந்துவிடக்கூடாது.

# நபிகளும் பத்து தோழர்களும்

நாயகத்தின் தோழர்கள் சஹாபாக்கள் என அழைக்கப்படுகின்றனர். அவர்களின் பட்டியல் விரிவானது. அவர்களில் சுவன வாழ்க்கைக்குரிய முன்மாதிரிகளாக பத்து தோழர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

சொர்க்க வாழ்க்கைக்கு நன்மாராயம் கூறப்பட்ட பத்து தோழர்களின் அறப்பணிகளை அப்துர் ரஹ்மான் பின் அல் அக்னாஸ் விரிவாக எழுதி வைத்துள்ளார். அவர் ஒருநாள் பள்ளிவாசலில் இருந்தபோது , ஒருவர் அலி பின் அபூ தாலிபைப் பற்றி குறை கூறிப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது நபித் தோழர்களில் ஒருவரான ஸயீத் பின் ஜைத் அந்த மனிதரைப் பிடித்துக் கொண்டு கூறினார்.

"பத்து நபர்கள் சுவனம் செல்வார்கள் என்று நபிகள் நாயகம் கூறினார்கள், அதற்கு நான் சாட்சியம் கூறுகின்றேன்" என்றபடி ஒன்பது சஹாபிகளின் பெயர்களைக் கூறினார். பத்தாவது நபர் என்று வினவப்பட்ட போது, "அவர் வேறு யாருமல்ல. சயீது இப்னு ஜைது ஆகிய நான் தான்!" என்று தமது பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னார்,

சுவர்க்க வாழ்க்கைக்கு நன்மாராயம் கூறப்பட்ட அந்த பத்து நபித் தோழர்கள் அபூபக்கர் சித்தீக், உமர், இப்னுல் கத்தாப் உதுமான், இப்னு அஃப்பான் அலி இப்னு அபூ தாலிப் தல்ஹா இப்னு உபைதுல்லா, ஜூபைர் இப்னு அவ்வாம் அப்துல் ரஹ்மான் இப்னு அவ்ஃப் சஃது இப்னு அபீ வக்காஸ் சயீது இப்னு ஜைது அபூ உபைதா பின் அல் ஜர்ராஹ் இப்னு என்ற சொல் மகனைக் குறிப்பதாகும். அதை அடுத்து வருவது தந்தையின் பெயர். நபியின் தோழர்களான சஹாபாக்கள் இறைவனின் அன்பைப் பெறுவது ஒன்றே தங்கள் இலக்கு என்ற நோக்கத்துடன் வாழ்ந்தவர்கள். அதற்காகவே அவர்கள் அரும்பாடுபட்டார்கள். அதனால் சொர்க்க வாழ்க்கையை அனுபவிக்கக்கூடிய தமது தோழர்கள் என்று நபிகள் நன்மாராயம் கூறினார்கள்.

அபூபக்கர், உமர், உதுமான், அலி ஆகிய நால்வரும் அடுத்தடுத்து கலீபாக்களாக - ஆட்சியாளர்களாக - பதவி வகித்தார்கள். அபூபக்கரும் உமரும் நபி நாயகத்துடன் நெருங்கிப் பழகினார்கள். உமர் நல்ல வலிமையும் நற்பண்புகளும் உடையவர். அதனால் அவர்களின் ஆலோசனைகளை அண்ணல் நபி புறக்கணித்ததேயில்லை.

உதுமான் இறைத் தூதரிடம் நெருக்கமாக இருந்தார். அபூபக்கர், உமர் ஆட்சியின் போது, இரண்டு கலீபாக்களுக்கும் ஆலோசகராக இருந்த பெருமைக்குரியவர் உதுமான்.


நான்காவது கலீபாவான அலி, நபிகள் நாயகத்தின் பெரிய தந்தை அபூதாலிபின் நான்காவது மகன். இளம் வயதிலேயே இவர் நபிகள் நாயகத்துடன் இணைந்து செயல்படத் தொடங்கினார். இளையர்களில் இவரே முதலில் இஸ்லாத்தைத் தழுவியவர். துணிவும்



தியாகச் சிந்தனையும் கொண்டவர். நபிகளின் புதல்வி பாத்திமா நாயகியை திருமணம் செய்துகொண்டவர்.

நபிகளின் பத்து தோழர்களும் இஸ்லாமை வாழ்க்கை நெறியாக வாழ்ந்து காட்டியவர்கள் ஆவர்.

# வானலைகளில் விடுதலை வேட்கையை ஒளிர வைத்த ஜவான்



■ நா.யோகேந்திரநாதன்

ஒரு புரட்சிகரக் குரலாக தாயகப் பற்றையும் விடுதலை வேட்கையையும் கேட்பவர்களின் சிந்தனையில் விதைக்கும் ஒரு ஊடகமாக, இன்னொருபுறம் வேறுவேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அல்லது ஒத்திவைத்து விட்டு தவறாமல் கேட்கும் ஒலிபரப்பாக புலிகளின் குரல் வானொலியை ஓங்கி நிற்க வைத்த பெருமைக்குரியவன் ஜவான்.

இத்தனைக்கும் ஜவான் ஒரு பிரசித்தி பெற்ற கலைஞனல்ல - பிரபல எழுத்தாளனுமல்ல - இசை வல்லுநருமல்ல - பெரும் தொழில்நுட்ப ஆற்றலாளனுமல்ல, ஆனால் அவன் நல்லதொரு ரசிகன். எந்த ஒரு படைப்பையும், அதற்குள் புகுந்து அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து ரசித்துச் சுவைப்பதுதான் அவனின் தனித்துவம்.

அதனால்தான் அவனால் திறமைசாலிகளை இனங்காண முடிந்தது. ஆற்றல் கொண்டவர்களை அரவணைத்து அவர்களை வானொலிக் கலைஞர்களாக வடிவமைக்க முடிந்தது. அதனால் மூலைமுடுக்குகளில் காணப்படாமற் கிடந்த பல கலை, இலக்கியவாதிகள் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றனர். உறங்கிக் கிடந்த அவர்களின் ஆற்றல் சீறியெழுந்து விடுதலைப் போராட்டத்தின் வலிமைமிகு கலாசார ஆயுதங்களாக உருவெடுத்துக் கொண்டன.

அவனுக்கும் எனக்குமுள்ள உறவு - ஒரு பொறுப்பாளருக்கும் பணியாளருக்கு மிடையே உள்ள உறவா? ஒரு போராளிக்கும் பொதுமகனுக்கும் இடையேயுள்ள உறவா? இரு நண்பர்களுக்கு இடையே உள்ள உறவா? ஒரு விடுதலைப் புலிக்கும் பொதுவுடைமைவாதிக்கும் இடையேயுள்ள உறவா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தனித்தனியாகவும் ஒட்டுமொத்தமாகவும் கிடைக்கக்கூடிய ஒரே பதில் "ஆம்" என்பது மட்டும்தான்.

நான் ஜவானுடன் முதன்முதலாக நெருங்கிப் பழகியது 1996 இல் சத்ஜெய - 2 இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி நகரப் பகுதியும் சுற்றாடலும் இடம்பெயர்ந்த காலப்பகுதியில்தான். அப்போது புலிகளின் குரல் வானொலி கொக்காவிலில் இயங்கிக் கொண்டிருந்தது.

அப்போது நான் புலிகளின் குரலுக்கு ஒன்றிரண்டு நாடகங்கள் எழுதியதுண்டு. அதில் "மண்தின்னி" என்ற நாடகம் பல தரப்பினரதும் அமோக பாராட்டுக்களைப் பெற்றது. சில நினைவுதினங்களின்போதும் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் எழுதிக் கொடுப்பதுண்டு.

அப்படியான ஒருநாளில் ஜவானை நேருக்கு நேர் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவன், கொஞ்சமேனும் இருங்கண்ணை கதைச்சுப் போட்டுப் போவம்" என்றான். நானும் சம்மதித்தேன்.

அவன், எனது படைப்புகளில் உள்ள ஆய்வுப் பார்வையையும் மொழி வளத்தையும் கேட்பவரைத் தொடர்ந்து கேட்க வைக்கும் கவர்ச்சியையும்தான் மிகவும் ரசிப்பதாகக் கூறியதுடன். புலிகளின் குரல் வானொலிக்கு நிகழ்ச்சிகள் செய்ய முடியுமா எனவும் கேட்டான். உடனடியாகவே நான் சம்மதித்து விட்டேன். ஏனெனில் எனக்குள்ளும் விடுதலைப் போராட்டத்துக்கு என் கலை, இலக்கியத்தைப் பயன்படுத்துவதில் ஆற்றலும் உண்டு. அனுபவமும் உண்டு. ஆர்வமும் உண்டு. "தாமரைத் தடாகம்" என்ற சஞ்சிகை நிகழ்ச்சியும் "அகமும் புறமும்" என்ற அரசியல் நிகழ்ச்சியும் செய்வதாக முடிவெடுக்கப்பட்டது.

கதைத்து முடிந்து எழும்போது ஜவான் சிரித்தவாறே, "அண்ணை பொதுவுடைமை தத்துவம் போதிக்கிறதை விட்டிட்டு விடுதலைப் போராட்டத்துக்கு முக்கியத்துவம் குடுத்து எழுதுங்கோ", என்றான்.

நான் உடனடியாகவே, "பொதுவுடைமைத் தத்துவம் சகல விதமான ஒடுக்குமுறைகளுக்கும் எதிரானது. தேசிய இனங்களின் மீதான ஒடுக்குமுறை எண்டதுகூட வர்க்க ஒடுக்குமுறையின்ரை ஒரு வடிவம்தான். அப்படியிருக்க ஏன் கொம்யூனிசத்தைக் கண்டு வெருளுறியள்" எனக் கேட்டேன்.

"அப்படியில்லை... அவையள் தத்துவம் பேசிக் கொண்டிருப்பினமேயொழிய ஒண்டுமே செய்ய மாட்டினம்" என்றான் அவன்.

"உண்மை! அதாலைதான் அவை தேய்ஞ்சு கொண்டிருக்கினம். நீங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறியள். நடைமுறை இல்லாத தத்துவம் ஏட்டுச் சுரைக்காய் போலை, தத்துவம் இல்லாத நடைமுறை இருட்டில் தடுமாறுவதைப் போல" என்றேன் நான்.

ஜவானும் சிரித்தவாறே ஏற்றுக் கொண்டான்.

புலிகளின் குரல் முள்ளியவளைக்கு இடம்பெயர்ந்தது. எனக்கும் ஜவானுக்குமுள்ள பிணைப்பு மேலும் மேலும் வலுப் பெற்றது. வாராவாரம் தாமரைத் தடாகம், அகமும் புறமும், உன்னதபயணம், கவிதா நிகழ்வு, நட்சத்திரப் பூக்கள், அரசியல் வானில், தொடர் நாடகங்கள் என என்னால் எழுதித் தயாரிக்கப்பட்ட பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின. உயிர்த்தெழுகை என்ற தொடர் நாடகம் தினமும் ஒலிபரப்பாகி மக்களை எமது வானொலியுடன் கட்டிப்போட்டமை குறிப்பிடத்தக்கது. இது 150 அங்கங்கள் ஒலிபரப்பாகியது.

இவற்றை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு மனிதன் எவ்வளவு அதிகூடியளவு வழங்க முடியுமோ அதற்குக் கூடுதலாகவே, அவனை வழங்க வைக்கும் ஜவானின் ஆற்றலும் அக்கறையும் பற்றி விளக்குவதற்காகத்தான். எதையும் முடியாது என ஜவான் சொன்னதாக நான் அறிந்ததில்லை. "அது செய்யலாமண்ணை?" இதுதான் அவனின் மந்திரம்.

ஒருநாள் கொக்காவிலில் உள்ள 400 அடி உயர ஒலிபரப்புக் கோபுரத்தில் ஏற வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. நல்ல காற்றடித்த நேரமாதலால் பணியாள் ஏறத் தயங்கினான். ஜவான், "நீ இரண்டு காலையும் வைத்துக் கொண்டு ஏறப் பயப்படுகிறாய்? பார்... நான் ஒற்றைக் காலால் ஏறி வேலையை முடித்துவிட்டு வருகிறேன்." என்று விட்டுப் பதிலை எதிர்பாராமலே கோபுரத்தில் ஏறிவிட்டான். ஜவான் ஒரு காலை இழந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில் அன்றைய நிலையில் இரு கால்களும் உள்ள ஒருவனுக்கே அன்று அதில் ஏறுவது சிரமம். ஆனால் ஜவானின் தன்னம்பிக்கையில் முடியாது என்பது தோல்வியடைந்ததை அன்று என்னால் உணர முடிந்தது.

ஜவான் ஒரு உறங்காத மனிதனோ என நான் சந்தேகப்படுவதுண்டு. அவன் உறங்கி நான் கண்டதேயில்லை. எந்த ஒரு சாமப் பொழுதிலும் ஏதோ செய்து கொண்டிருப்பதையே பலமுறை கண்டிருக்கிறேன். ஆனால், இவன் வாகனம் ஓடிக் கொண்டு செல்லும்போது, இவனையறியாமலே தூங்கி விடுவதுண்டு. அனால் சில விபத்துக்களைச் சந்தித்ததும் உண்டு.

கேப்பாபிலவு பாலத்துக்குள் மோட்டார் சைக்கிளுடன் தலைகீழாகப் போனதும், சில நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டிய நிலை ஏற்பட்டதையும் மறந்து விட முடியாது. மாங்குளத்தில் "பிக் அப்"பையே தலைகீழாகப் புரட்டிவிட்ட பெருமையும் உண்டு.

புலிகளின் குரல் நிறுவனத்தை அதிகாரம் செலுத்தாமல், "நீங்கள் செய்வீங்களாண்ணை" என்ற வார்த்தைகளை வைத்துக் கொண்டு நிர்வாகத்தைச் சிறப்பாக மேற்கொண்ட பெருமை ஜவானுக்கு உண்டு.

இன்று எமது விடுத
ஆயுத வடிவம் பெரும்
மூலம் தோற்கடிக்கப்ப
போராட்டம் தோற்கடிக்
அது உருவானமைக்க
தோற்கடிக்கப்படவில்ல
ஜனநாயக வடிவத்தை
எழுந்தது.

விடுதலைப் புலிகள்
முனைப்புப் பெற்று செ
போதுதான், தமிழ் மக்
ஒற்றுமையின் சின்னம
தேசியக் கூட்டமைப்பு உ

ஆனால் போர் முடி
தேசியக் கூட்டமைப்புக்
விரோத சக்திகள் தலை
தமிழ் மக்களின் அபில
வழிநடத்துமளவுக்கு த
வருகின்றனர். தமிழ்த்
கட்சியின் கிளையாக

விடுதலைப் புலிகள்
நடவடிக்கைகளில் ஈடு
புரிந்தனர் என்றும் கூற
திருப்திப்படுத்தி வருகி
விடுதலைப் புலிகள் எ
பணியாற்றினர் என்பன
பணிகூட எவ்வாறு மக்
அமைந்தது என்பதை
தடம் மாறிச் செல்லும்
வேண்டியுள்ளது.

அவ்வகையில் ஜவ
போராளியுடனான என
பகிர்ந்து கொள்கிறேன

எமது சமூகத்
பொறாமை, கழு
பழிவாங்கல் என்
குரல் மட்டும் வி
முடியுமா? அவர்
சரியானவற்றை



து விடுதலைப் போராட்டத்தின்
் பெரும் சர்வதேச சதி
கடிக்கப்பட்டு விட்டது. ஆயுதப்
தாற்கடிக்கப்பட்ட போதிலும்
னமைக்கான காரணம்
படவில்லை. எனவே எமது போராட்டம்
ழவத்தை எடுக்க வேண்டிய தேவை

ப் புலிகளின் ஆயுதப் போராட்டம்
பற்று வெற்றியை நோக்கி முன் சென்ற
மிழ் மக்களின் அரசியல் குரலாகவும்,
சின்னமாகவும் அவர்களால் தமிழ்த்
மைப்பு உருவாக்கப்பட்டது.
பார் முடிவுக்கு வந்த பின்பு தமிழ்த்
மைப்புக்குள் புகுந்து கொண்ட மக்கள்
கள் தலைமையைக் கைப்பற்றி
ன் அபிலாஷைகளைப் புறந்தள்ளி
வுக்கு துணிந்து செயற்பட்டு
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஐ.தே.
ளயாக மாற்ற முனைகின்றனர்.
புலிகள் பயங்கரவாத
ரில் ஈடுபட்டனர் என்றும் போர் குற்றம்
றும் கூறி பேரினவாதிகளை அவர்கள்
தி வருகின்றனர். இந்நிலையில்
லிகள் எப்படி அர்ப்பணிப்புடன்
ர் என்பதையும் அவர்களின் அரசியல்
வாறு மக்கள் நலன் சார்ந்ததாக
ன்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
சல்லும் நிலையில் நினைவுபடுத்த
து.
பில் ஜவான் என்ற ஒப்பற்ற விடுதலைப்
ான எனது அனுபவங்களை இங்கு
ர்கிறேன்.

சமூகத்திலுள்ள போட்டி,
ம, கழுத்தறுப்பு, வால் பிடிப்பு,
கல் என்பனவற்றுக்குப் புலிகளின்
டும் விதிவிலக்காக விட
? அவற்றுக்குள்ளால் சுழியோடி
ற்றையும் பிழையானவற்றையும்

இனம்கண்டு முன்கொண்டு செல்வது அவ்வளவு இலகுவான விடயமல்ல. அப்படியான சந்தர்ப்பங்களிலெல்லாம் நிதானமாக முடிவெடுப்பதில் ஜவான் வெற்றிகரமாகச் செயற்பட்டதை மறுக்க முடியாது.

குறிப்பாக என்னளவில்கூட என்று நிகழ்ச்சிகள், தொடர் நாடகங்கள் என்பனவற்றுக்கு மக்கள் மத்தியில் கிடைத்த பேராதரவு பலருக்கு பொறாமைத் தீயை மூட்டி விட்டது. நான் எனது நாடகங்கள் மூலம் இளம் நெஞ்சங்களுக்கு காதலுணர்வையூட்டி அவர்களைக் கெடுக்கிறேன் எனவும் பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்துகிறேன் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது. ஜவான் குழம்பிப் போய்விடவில்லை. குற்றம் சுமத்தியவர்களுடன் எனக்கொரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்தான். அவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கான எனது விளக்கம் அவர்களை வாயடைக்க வைத்துவிட்டது.

இன்னொருவர் ஜவானிடம் எனது நிகழ்ச்சிகளில் கொம்யூனிசம் மணக்கிறது எனக் குற்றஞ்சாட்டினார். ஒருநாள் ஜவான் அவரிடம் எங்களிலையும் பயங்கரவாதம் மணக்குதெண்டு சந்திரிகா சொல்லுறா என்று ஒரு பதிலைக் கொடுத்தான். அத்துடன் அவர் ஜவானிடம் கொம்யூனிசக் கதை சொல்வதை விட்டுவிட்டார்.

சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்ற காலத்தில் பல்வேறு சக்திகளும் எமக்கு ஆதரவளிப்பது என்ற பேரில் புலிகளின் குரல் மூலம் சிந்தனைக் குழப்பங்களை ஏற்படுத்த முயன்றனர். சிலர் துதிபாடும் கலாசாரத்தை வளர்க்கவும், இந்திய உளவாளிகள் தனித் தமிழ் உபயோகம் என்ற பேரில் எம்மிடையே குழப்பங்களை விளைவிக்கவும் புலனாய்வு தகவல்கள் என்ற பேரில் ஆயுத மோகத்தை வளர்க்கவும் புலிகளின் குரல் வானொலியை பயன்படுத்த முயன்றனர். ஆனால் ஜவான் அவர்களை உரிய நேரத்தில் இனங்கண்டு சரியான நடவடிக்கை எடுத்ததால் பலவித குழப்பங்கள் தவிர்க்கப்பட்டன.

ஒரு சிறந்த நிறுவனர், பொறுப்பாளராக, நிர்வாகியாக, கலை - இலக்கியவாதிகளை அரவணைத்துச் செல்லும் தனியாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ள ஜவான் ஒரு தலைசிறந்த ஆயுதப் போராட்ட வீரனுமாவான். மிட்டாஸ் கடைச் சந்தியில் இந்திய இராணுவத்தினரைத் தாக்கிக் கொன்று ஆயுதங்களைக் கைப்பற்றியது உட்பட இந்திய இராணுவத்தைத் தாக்கிக் கலக்குவதில் முன்னணிப் பாத்திரம் வகித்தவன். யாழ். கோட்டை விடுவிப்புப் போரில் ஒரு காலை இழந்தவன்.

ஆனால் எனக்கும் அவனுக்குமுள்ள உறவு வானொலிச் சேவையூடாகவே ஆரம்பித்தமையால் அவரின் முன்னைய சாதனைகளை என்னால் பதிவு செய்ய முடியவில்லை. தலைவரிலும் எமது இயக்கத்திலும் ஒரு அணுவளவுகூடச் சுயநலமின்றி முற்றுமுழுதாக மக்களுக்கே அர்ப்பணமானவன். அவனின் நினைவுகள் எமது நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும். •

# ஜவான்....

(06ஆம் பக்கம் பார்க்க)

ஒரு குடும்பத்தினர் காப்பாற்றினர் என சிரித்திரனில் வெளியான கட்டுரையொன்று வெளிப்படுத்தியது.

குரு(தி)ஷேத்திரம் என்ற தலைப்பில் வெளியான இக்கட்டுரை புதுவிதி பத்திரிகையில் மறு பிரசுரமாகியயிருந்தது. யாழ். கோட்டை முகாம் மீதான தாக்குதல் முயற்சியில் இவர் காலை இழந்தார். எனினும் இவரது செயற்பாடுகளில் எந்தத் தொய்வும் ஏற்படவில்லை. 'புலிகளின் குரல்' பொறுப்பாளராக இவர் நியமிக்கப்பட்டதும் இவரது ஆளுமை நன்றாகத் துலங்கியது. அப்பிரிவில் பணியாற்றிய அனைவருமே தாங்களும் போராளிகளே என்று உணரத்தக்க வகையில் அவர்களை உருவாக்கினார்.


உலகில் எந்த ஒரு வானொலியுமே யுத்தத்தை நேரடி ஒலிபரப்பு செய்ததில்லை. ஆனால் புலிகளின் குரல் இப்பணியைச் செய்தது என்பதே இதற்கு உதாரணம். ஆனையிறவு முகாமை வீழ்த்தவென கடல் வழியாகக் கொண்டு செல்லப்பட்ட போராளிகள் இத்தாவிலில் நிலையெடுத்திருந்தனர். அவர்களை அங்கிருந்து அகற்றப் பலமுறை தனது உச்சக்கட்டப் பலத்தையும் பயன்படுத்தியது அரசு. பிரிகேடியர் பால்ராஜின் தலைமையில் மிக உக்கிரமாகச் செயற்பட்டனர். போராளிகள் இந்த இடத்துக்கு செல்வது மிகச் சிரமம். நீரேரியூடாகவும் செல்ல வேண்டியிருக்கும். அடிக்கடி எறிகணை விழுந்து வெடிக்கும். அவ்வாறான சூழலில் ஈழநாதம் பொறுப்பாளர் தினேஸும் நானும் அங்குள்ள நிலைமைகளை கண்டு வாசகர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கில் அங்கு சென்றோம்.

அப்போதுதான் எமக்குத் தெரிந்தது எங்களுக்கு முன்னரே ஜவான் அங்கு வந்து சென்று விட்டார் என்று. இது குறித்து அங்கிருந்த போராளி ஒருவர் தெரிவிக்கையில், வழக்கமாக இந்த பொக்கசுக்குள் இருந்துதான் ஸ்டெச்சரில் ஆட்களை வெளியில் கொண்டு செல்வோம். காயப்படும் எவரையும் வாகனத்தில் கொண்டு செல்ல முடியாது. தண்ணீருக்குள்ளால் கொண்டு செல்ல ஸ்டெச்சரையே பயன்படுத்துவோம். வழக்கமான இந்த நடைமுறைக்கு மாறாக வெளியில் இருந்து ஒருவரை இங்கு ஸ்டெச்சரில் கொண்டு வந்தார்கள்.இவ்வாறு கொண்டு வரப்படுபவர் யார் எனப் பார்த்தால் அது ஜவான் அண்ணாதான்.

கண்டிப்பாக உள்ளே வந்து பார்த்து நிலைமைகளை அறிந்து நேர்காணல்களையும் எடுக்க வேண்டும் என பால்ராஜ் அண்ணரிடம் சொல்லி விட்டாராம். அதனால் ஜவான் அண்ணாவை இப்படிக் கொண்டு வரவேண்டியதாயிற்று" எனக்குறிப்பிட்டார். வெறுமனே கேள்விச் செவியர்களாக இருந்து கொண்டு கிடைக்கும் ஒரு சிறு துரும்புக்கு கண், காது, மூக்கு எல்லாம் வைத்து வரலாற்றைத் திரிக்கும் எழுத்தாளர்களையும் ஊடகவியலாளர்களையுமே இன்று காண்கிறோம்.

ஆனால் தனது உயிரைப் பணயம் வைத்து செய்திகளை நம்பகரமாகக் கொடுக்க வேண்டுமென்பதில் எவ்வளவு அக்கறையாக இருந்துள்ளார். என்பதை அறியும்போது தலைவனின் வளர்ப்பு என்பதற்கு அப்பாலும் ஒரு விடயமுண்டு. ஈழமுரசில் கோபு ஐயாவுடன் ஜவான் பழகிய விதம் அவரிடமிருந்து கற்றுக்கொண்டவை என்பன நினைவுக்கு வருகின்றன.

மகாபாரதப் போரில் அப்பன் பிள்ளைகள் எல்லோரும் ஒன்றாகக் களத்தில் நின்றார்கள் என்று அறிந்தோம். அர்ச்சுனன் - அபிமன்யு, பீமன்-கடோத்கஜன், துரோணர்-அஸ்வத்தாமா இவ்வாறான சம்பவங்களை கதைகளில்தான் படிக்க முடியும். வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், கணக்காய்வாளர்கள், பொறியியலாளர்கள் எனப் பல துறையினரும் தமது பிள்ளைகளை அதேதுறையில் வல்லவர்களாக உருவாக்குவார்கள். அரசியல்வாதிகள் தமது வாரிசுகள் வசம் தமது கட்சி போய்விட வேண்டுமென்பதில் அக்கறையாக இருப்பார்கள். நேரு - இந்திரா, ராஜீவ் - ராகுல் (இடையில் ராஜீவ் மனைவி சோனியா), கருணாநிதி, ஸ்டாலின் - கனிமொழி, சிறிமா- சந்திரிகா - அநுரா, மாவை - கலையரசன் என்ற வரிசையைக் கண்டுள்ளோம். இதனால் எந்த விடுதலைப் போராட்டத்திலும் தந்தையும் பிள்ளைகளும் சமகாலத்தில் களத்தில் நின்றதாக நாம் அறியோம். பிரபாகரனே இதனைத் தொடக்கி வைத்தார். (மாவீரரின் பிள்ளைகளும் களத்தில் நின்றனர்) புத்திர சோகத்தை அனுபவித்த வரலாறும் ஈழப்போராட்ட வரலாற்றில் தலைவர், பொட்டு, இன்பம் உட்பட பலருக்கும் உண்டு. காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் பேபி அண்ணாவும் (இளங்குமரன்) மகளும், பாலகுமாரனும் மகனும், ஜவானும் மகளும் உள்ளனர். •



# வியாபாரத்தை பெருக்க உதவும் சமூகவலைத்தளங்கள்

ஒரு நிறுவனம், தான் செய்யும் தொழிலில் வெற்றி பெற வேண்டுமெனில், சந்தைப்படுத்தலில் மிகச் சிறப்பாகச் செயற்பட வேண்டும். பெரிய நிறுவனங்களால் மட்டுமே எல்லா விதங்களிலும் செயற்பட்டு, தங்கள் உற்பத்திகளை எல்லா மக்களுக்கும் கொண்டுசெல்ல முடியும். ஆனால், சிறிய நிறுவனங்களுக்கு அப்படி வசதிகள் இல்லை.

ஆனால், இன்றைய இணைய யுகத்தில் சிறிய நிறுவனங்கள் இதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. காரணம், சமூகவலைத்தளங்களின் உதவியுடன் நம் நகரம் மட்டுமல்ல, நம் நாடு மட்டுமல்ல, உலகம் முழுக்க நம் உற்பத்திகளைக் கொண்டு செல்ல முடியும்.

கடந்த 2018 ஜனவரி நிலவரப்படி, 12 மில்லியன் பேர் 'பேஸ்புக்' ஐ பயன்படுத்துகிறார்கள். இதுதவிர, இன்ஸ்டாகிராம், டுவிற்றர், வட்ஸ் அப், வைபர் என சமூக வலைத்தளங்கள் பல இருந்தாலும், இன்றைய நிலையில் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் தளங்கள் வியாபார சந்தைப்படுத்தலுக்கு ஏற்றதாக உள்ளன. குறிப்பாக, பேஸ்புக் அட்ஸ் மனேஜர் வசதி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த வசதியைப் பயன்படுத்தித்தான் பெரும்பாலான நிறுவனங்கள், அவர்களுக்கான வாடிக்கையாளர்களை இனம் கண்டுவருகின்றன.

இப்போது, இன்ஸ்டாகிராம் தளமானது வியாபார சந்தைப்படுத்தலுக்குப் பயனுள்ளதாக மாறியிருக்கிறது. இளைஞர்களைக் கவரும் லைப் ஸ்ரைல் பொருள்களின் சந்தைப்படுத்தலுக்கு இன்ஸ்டாகிராம் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. தைத்த ஆடைகள் மற்றும் உணவு சார்ந்த விளம்பரங்களுக்கும் இன்ஸ்டா பக்கங்கள் பயனுள்ளவையாக இருக்கின்றன.

சந்தைப்படுத்தல் தொடர்பான விடயங்களை எழுத்து வடிவில் தந்தால், அதை யாரும் விரும்பிப் படிப்பதில்லை. காரணம் அதை முழுவதுமாகப் படிக்கும் அளவுக்கு யாருக்கும் நேரமில்லை. மாறாக, சந்தைப்படுத்தல் சார்ந்த விளம்பர போஸ்ரர்கள், வீடியோக்கள் பார்ப்பதையே மக்கள் விரும்புகிறார்கள். இதனால் சமூக வலைத்தளங்களில் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் விளம்பர போஸ்ரர்கள், வீடியோக்கள் இருப்பது அவசியம்.

ஒரே விளம்பரத்துக்கு இரண்டுக்கும் மேற்பட்ட விளம்பர போஸ்ரர்களைப் பதிவேற்றி, அதில் எதை மக்கள் அதிகம் விரும்புகிறார்கள் எனத் தெரிந்துகொண்டு, அதைப் பின்பற்றுவது முக்கியம். இதேபோல, வியாபார சந்தைப்படுத்தல் என்றைக்கும் தவறான வாக்குறுதிகளை மட்டும் வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கக்கூடாது.

# வெற்றி மொழி: மேரி கியூரி

*1879 ஆம் ஆண்டு முதல் 1934 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த மேரி கியூரி புகழ்பெற்ற போலந்து மற்றும் பிரெஞ்சு விஞ்ஞானி ஆவார். பொலோனியம் மற்றும் ரேடியம் போன்ற கதிர்வீச்சு தனிமங்களை கண்டுபிடித்தவர் இவர். நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணியான இவர், இரண்டு முறை இவ்விருதைப் பெற்ற முதல் நபர் மற்றும் ஒரே பெண் போன்ற புகழுக்குச் சொந்தக்காரர். மேலும், இயற்பியல் மற்றும் வேதியியல் என இரண்டு வெவ்வேறு அறிவியல்களில் நோபல் பரிசு வென்ற ஒரே நபரும் இவரே.*

- நாம் ஏதோவொரு பரிசைப் பெற்றிருக்கிறோம் மற்றும் இந்த விடயம் அடையப்பட வேண்டிய ஒன்று என்பதை நாம் நம்ப வேண்டும்.
- மக்களைப் பற்றி குறைவான ஆர்வத்துடனும் கருத்துகளைப் பற்றி அதிக ஆர்வத்துடனும் இருங்கள்.
- வாழ்க்கையில் எதுவும் பயப்பட வேண்டிய விடயமில்லை, அது புரிந்துகொள்ள வேண்டியது மட்டுமே.
- விஞ்ஞானம் பெரும் அழகு என்று நினைப்பவர்களுள் நானும் ஒருவர்.
- வாழ்க்கை என்பது நம்மில் எவருக்கும் எளிதான விஷயம் அல்ல.
- தனிநபர்களை மேம்படுத்தாமல் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதில் நீங்கள் நம்பிக்கை வைக்க முடியாது.



- விடா முயற்சியைக் கொண்டிருப்பதோடு, அனைத்துக்கும் மேலாக நம் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.
- அதிகப்படியான விடயங்களை அறிந்துகொள்வதற்கான நேரம் இதுவே, இதனால் நமது அச்சம் குறையலாம்.
- முன்னேற்றத்துக்கான வழி விரைவானதோ அல்லது எளிதானதோ அல்ல என்பதை நான் கற்றுக்கொண்டேன்.
- சரியான செயல் ஒன்றை செய்துகொண்டிருக்கும்போது நீங்கள் ஒருபோதும் பயப்படக்கூடாது.
- என்ன செய்து முடிக்கப்பட்டது என்பதை ஒருவர் கவனிக்க வேண்டியதில்லை இன்னும் என்ன செய்யவேண்டும் என்பதை மட்டுமே பார்க்க வேண்டும்.

# பணம் சம்பாதிப்போமா...!

## செல்வம் சேர்க்கும் இரகசியம்



வருவாய் - சேமிப்பு = செலவு என புதிய சமன்பாட்டை உருவாக்க வேண்டும். அதாவது, நமக்குக் கிடைக்கும் வருவாயில் குறிப்பிட்ட சில வீதத்தை (10% - 30%) சேமிப்புக்காக முதலில் தனியாக எடுத்து வைத்துவிட்டு, பின்னர் மீதமுள்ளதைச் செலவழிப்பது முக்கியம். இதைவிட முக்கியம், நம் கண்ணுக்குத் தெரியாமல் வீணாகிவரும் விரயத்தைத் தடுக்க வேண்டும். என்னென்ன விரயங்களை நாம் செய்துவருகிறோம் என்பதைப் பட்டியல் இடுவோமா?

**விரயம் 1 - எண்டோவ்மெண்ட் காப்புறுதிகள்**

ஒருவருக்கு எதிர்பாராதவிதமாக இழப்பு ஏற்பட்டால், அதை ஈடுகட்டுவதற்கு மட்டுமே காப்புறுதிகள் தேவையே தவிர, டேர்ம் பிளான் மற்றும் மருத்துவ காப்புறுதிகளை தவிர்த்து, மற்ற எண்டோவ்மெண்ட் காப்புறுதிகள் ஒருவருக்குத் தேவையில்லை. காப்புறுதி என்பது முதலீடல்ல. காப்புறுதிகள் மூலம் சேமிப்பு என்ற ஒன்றே கிடையாது. எனவே, வருமான வரியைச் சேமிப்பதற்காக யாராலும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத காப்புறுதிகளை வாங்க வேண்டாம்.

**விரயம் 2 - வீட்டு வாடகை - மாதத் தவணை**

வாடகையாக நீங்கள் செலுத்தும் தொகை ஒருபோதும் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கப் போவதில்லை. அதுபோல, வீட்டுக் கடனுக்காக நீங்கள் செலுத்தும் வட்டியும்கூட ஒருபோதும் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கப் போவதில்லை. எனவே, வீட்டுக் கடன் வாங்கப்போகிறீர்கள் எனில், இ.எம்.ஐ மூலம் நீங்கள் செலுத்தும் வட்டி, நீங்கள் வாடகையாகச் செலுத்தும் தொகையை விட அதிகமாக இல்லாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

உதாரணத்துக்கு, விஜய் என்பவர் மாதம் 70,000 ரூபாய் சம்பாதிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர், ரூ. 30 லட்சம் வீட்டுக் கடனை 15 ஆண்டுகளில் திரும்பக் கட்டுகிறார். இதற்கு மாதம் ரூ.30,000 செலுத்த வேண்டும் என்பது ஒரு திட்டம். இதற்கு பதிலாக, ரூ.60 லட்சம் வீட்டுக் கடன் வாங்கி, அதை 30 ஆண்டுக் காலத்தில் திரும்பக் கட்டினால், இ.எம்.ஐ-ஆக மாதமொன்று ரூ.47,000 கட்ட வேண்டும் என்பது இரண்டாவது திட்டம்.

அதாவது, முதல் திட்டத்தின்படி, வட்டிக்கு மட்டும் செலுத்தப்படும் தொகை ரூ.24 லட்சம். ஆனால், இரண்டாவது முறையின்படி, செலுத்தவேண்டிய மொத்த வட்டித் தொகை ரூ.1.1 கோடி. இதற்கான அர்த்தம் என்ன? மாதமொன்றுக்கு சராசரியாகச் செலுத்தவேண்டிய வட்டித் தொகை, முதல் திட்டத்தில் ரூ.13,000 இரண்டாவது திட்டத்தில் ரூ.30,000. இந்தத் தொகை ஒருபோதும் அவருக்குத் திரும்பக் கிடைக்காது.

விஜய் தற்போது மாத வாடகையாக ரூ. 15,000 செலுத்தி வந்தால், முதல் திட்டம்தான் அவருக்குச் சரியானதாக இருக்கும். அவர், மாத வட்டி சராசரியாக ரூ.18,000 செலுத்தும் அளவுக்குத் தனது கடனை ரூ.40 லட்சம் வரைக்கும் அதிகப்படுத்தலாம். இரண்டாவது, 60 லட்சம் ரூபாயாக அதிகப்படுத்தினால், அது அவருக்கு மிகப் பெரிய நிதி இழப்பாக இருக்கும்.

(சம்பாதிப்போம்)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்



# உருளும் உலகில்...! தலைசுற்றும் விலை..!

ஓர் ஏல விற்பனையில் இரு சீனர்கள் போட்டி போட்டுக்கொண்டு , இறுதியில் இந்தப் பந்தயப் புறாவை 12.5 இலட்சம் யூரோ (25.1 கோடி இலங்கை ரூபா) தொகைக்கு ஒருவர் வாங்கியுள்ளார். ஆசிய நாட்டவர்கள் ஆர்வத்தோடு பந்தயப் புறாக்களை வாங்க ஆரம்பித்திருப்பது புதினம் என்கிறார்கள். இத்தனை பெரிய தொகை கொடுத்து வாங்கப்பட்ட புறாவின் பெயர் ஆர்மன்டோ. நீண்ட தூரப் பந்தயங்களுக்காகவே முறையாகப் பயிற்சியளிக்கப்பட்டு, பெல்ஜியத்தில் வளர்க்கப்பட்ட புறா இது.

இதற்கு முன்பு ஏலத்தில் பந்தயப் புறாவொன்று வாங்கப்பட்ட அதிஉச்ச தொகை(425,000)டொலர்தான் (7 கோடியே 56 இலட்சம் இலங்கை ரூபா) சரித்திரம் படைத்திருந்தது. பந்தயப் புறாக்களை வளர்த்து அவற்றை விற்பதையே முழுநேரத் தொழிலாகக் கொண்டுள்ள பெல்ஜியம் நாட்டவரான ஜோர்வெல் வேர்சூட் என்பவர், ஏல விற்பனையில் இந்தத் தடவை சுமாராக 20 இலட்சம் யூரோ தொகைக்கு பந்தயப் புறாக்கள் விற்பனையாகி உள்ளதாகக் கூறுகிறார்.

பந்தயப் புறாக்கள் மணிக்கு 80கி. மீற்றர் வேகத்தில் பறப்பதோடு, 1000 கி.மீற்றருக்கு மேற்றபட்ட தூரத்தை கடக்கவல்லன. கி.பி. 1200 இல் தகவல்கள் பரிமாற புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. கி.பி. 1800 களில் பந்தயப் புறாக்களாக மாற்றப்பட்டுள்ளன.

# திருப்பு விமானத்தை!





விமான நிலையத்தில் தன் பிள்ளையை மறந்து விட்டு விமானமேறிய தாயைப் பற்றி யாராவது அறிந்துள்ளீர்களா? ஏறியது போகட்டும், இந்தப் பிள்ளையை ஏற்றுவதற்காக அதே விமானம், "றிவேர்ஸில்" திரும்பி, புறப்பட்ட விமான நிலையத்திற்கு வந்த விநோதம் பற்றி அறிந்துள்ளீர்களா?

சவுதி அரேபியாவிலிருந்து கோலாலம்பூர் நகரத்திற்கு புறப்பட்ட விமானம்தான் இப்படி, விமானியால் மீண்டும் அதே இடத்திற்கு கொண்டு வரப்பட்டது.

சம்பந்தப்பட்ட தாயும் பிள்ளையும் அரச குடும்பத்தவர்களாக இருக்க வேண்டும். ஜெடா நகரின் அப்துல் அஸீஸ் விமான நிலையத்தில் "மறந்துபோய்" விட்டுவிட்டு வந்த பிளையை திரும்பவும் ஏற்றிவர, கட்டுப்பாட்டு நிலையம் பணிக்க, விமானியும் ஆணையை சிரமேற் கொண்டு, விமானத்தைத் திருப்பி வந்து, பிள்ளையை ஏற்றிக் கொண்டு சென்றுள்ளார். வளைகுடாச் செய்திகளில் சூடான செய்தியொன்றாக இது பிரசுரமாகி, பலரது புருவங்களையும் உயர்த்த வைத்துள்ளன. ஒரு பயணிக்காக, ஆகாயத்தில் பறந்ததை திருப்பி அழைப்பதானால், இது நிச்சயம் பெரிய இடத்து விவகாரந்தான் என்பதில் சந்தேகமே இல்லை என்கிறார்கள்.

# நிர்வாணப் பக்கிரிகள்

உலக நிர்வாண மிதி வண்டி தினத்தை சிறப்பிக்க உலக நாடுகளெங்கும் பெண்களும் ஆண்களும் தமது மிதிவண்டிகளிலும் நடையாகவும் தெருக்களில் பவனி வந்துள்ளார்கள். தலையில் ஹெல்மெட்டைத் தவிர உடம்பில் ஒரு துண்டு ஆடையும் இல்லாமல் ஆணோ, பெண்ணோ பிறந்த கோலத்தில், உடம்பில் வர்ணத்தைப் பூசிக் கொண்டு இந்த "சைக்கிள் ஓட்டம்" அல்லது பொடி நடை இடம்பெற்றது.



கழுத்தில் பட்டி, தலையில் தொப்பி, ஹெல்மெட் அல்லது விக்ஸ் அணிந்திருந்தாலும், ஆடை அணிவது பற்றி இவர்கள் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. லண்டன், மெல்பேர்ன் போன்ற நகரங்கள் உட்பட 70 உலக நகரங்களில் ஆண்டுக்கு ஆண்டு, காற்று மாசடைவதை எதிர்த்து இந்த நிர்வாண ஊர்வலத்தை நடாத்துகிறார்களாம்.

கலாசார மாசுபாட்டுக்கு என்ன செய்யப் போகிறார்கள்...?



# மனைவியைத் தூக்கு பியரைக் கொண்டாடு!

ஆண்கள் பெண்களின் பேச்சை தூக்கிப் பிடிக்க பின்வாங்கினாலும், அவர்களைத் தூக்கிச் செல்லத் தயங்குவதில்லை. பின்லாந்தவர்கள் இதற்காக போட்டி ஒன்றையே நடத்தி வருகிறார்கள். 31 ஆவது தடவையாக 80 ஜோடிகள் பங்குபற்றும் மனைவியைத் தூக்கிக் கொண்டு தடைதாண்டி ஓடும் போட்டி இந்த ஆண்டு பின்லாந்தில் இடம்பெறப்போகிறது.


முதலாவது இடத்தைப் பிடிக்கும் ஜோடிக்கு, பெண்ணின் எடையளவு பியர், ஒரு பை நிறைந்த மகளிர் பாவனைப் பொருட்கள், தம்பதியினரின் உருவங்கள் பொறித்த கலை வேலைப்பாடுடன் கூடிய ஒரு பொருள் பரிசாகக் கிடைக்கின்றது. எந்த நாட்டினரும் போட்டியில் பங்குபற்றலாம்.

## கூண்டோடு கைலாசம்

அந்தோ பரிதாபம்... துர் மரணம் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு நேருவது நடக்காத சம்பவமல்ல. அதையும் மீறி, கணவனும் மனைவியும், தாயும் பிள்ளையும் ஒன்றாக இறந்து போவதும் சம்பவித்துள்ளது. ஆனால் இந்தத் தடவை, ஒரே குடும்ப அங்கத்தவர்களாக அறுவரை விமான விபத்தொன்று பலி கொண்டிருக்கின்றது.

கனடாவில் வசித்த இந்திய பிரஜைகள் இவர்கள். பன்னகேஷ் வைத்தியா (73) , இவரது மனைவி ஹன்சினி (73), மகள் கோஷா(37) கணவன் பிரோற் (45) பிள்ளைகள் அனுக்ஷா(13), அஷ்கா(14) மொத்தம் அறுவர் நடுவானில் வெடித்த எத்தியோப்பிய விமானத்திற்குள் எரிந்து கருகியோ அல்லது உடல் துண்டு துண்டாகச் சிதறியோ மரணத்தைத் தழுவியிருக்கிறார்கள்.

கொடுமையிலும் கொடுமை இது!




# அரைநூற்றாண்டு

பிரான்ஸ்-பிரிட்டன் கூட்டிணைப்பில் வானில் கம்பீரமாக ஒரு காலத்தில் பறந்த கொன்கோர்ட் (Concorde) வானூர்தி ஞாபகத்தில் இருக்கிறதா? 2003இல் சேவையை நிறுத்திக் கொண்ட இந்த மின்னல் வானூர்தி இப்பாழுதும் இருந்தால் இந்த மாதம் அதற்கு 50 வயது. 1969 மார்ச்சில் முதற் தடவையாக பறக்க விடப்பட்ட ஒலியை விட வேகமான இந்த வானூர்தி, 2000மாவது ஆண்டில் நடைபெற்ற ஒரு விபத்தை முதற் காரணமாக வைத்து, சேவை நிறுத்தப்பட்டது. இதன் பயண நேரம் மற்றைய வானூர்திகளை விட பாதி நேரம் என்பது இதன் தனிச் சிறப்பு. இந்தச் சேவையை இரு நாட்டு அரசுகள் பேரிழப்பைச் சந்தித்தன என்பது ஒரு சோகமான பின்னிணைப்பு!

■ ஜெ.முகில்

# இது கீரிகளின் களம்!



உயிர் பிழைத்திருத்தல் ஒரு வகையில் குடும்பம் சார்ந்தது. பல இழப்புகளையும் தியாகங்களையும் குடும்பத்திற்காகவே பல உயிரினங்களும் கண்ணை மூடிக் கொண்டு செய்கின்றன. தியாகமும் இழப்பும் ஒரு சில உயிரினங்களின் குடும்பத்தை வேண்டுமானால் வாழ வைக்கலாம் எல்லாக் குடும்பத்தையும் வாழ வைக்காது. ஏனெனில் உயிர் வாழ்தல் தியாகம் சார்ந்தது மட்டுமல்ல வீரம் சார்ந்ததும். காட்டைப் பொறுத்தவரை தன்னுடைய அடுத்த தலைமுறையை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் கீரிப்பிள்ளைக்கும் இருக்கிறது - சிங்கத்திற்கும் இருக்கிறது. ஆனால், எப்படிப் பாதுகாக்கின்றன என்பதில்தான் இரண்டும் வேறுபடுகின்றன.

தமிழில் கீரிப்பிள்ளை, ஆங்கிலத்தில் மங்கூஸ். உலகில் மொத்தம் 34 வகையான கீரி இனங்கள் வசிக்கின்றன. அதில் முக்கியமான ஒன்று பான்டெட் மங்கூஸ். (Banded mangoose) ஒரு குழுவில் ஆண், பெண் என 20 கீரிகள் வரை இருக்கும். இதில் ஆண் கீரியே குழுவிற்குத் தலைவனாக இருக்கும். இரை தேடுவதில் தொடங்கி வழிநடத்துவது வரை எல்லாமே ஆண் எடுக்கும் முடிவுதான். தப்பிப் பிழைத்திருக்க வேண்டுமானால் காதுகளையும் கண்களையும் எப்போதும் கவனமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு தலைவனைச் சார்ந்தது. கூட்டத்தில் இருக்கிற தலைவன் எதிரிகளின் வருகையின் போது எச்சரிக்கை ஒலிகளை எழுப்பிக் கொண்டே இருக்கும். ஓடுவதும் ஒளிவதும் கீரிப்பிள்ளைகளுக்குப் புதிதில்லை என்றாலும் ஆபத்து நேரத்தில் எப்படித் தப்பிக்கிறோம் என்பது ஒவ்வொரு முறையும் அவை கற்றுக் கொள்ளும் பாடம்.

குழுவில் உள்ள எல்லாப் பெண் கீரிகளுடனும் தலைவனாக இருக்கும் ஆண் மட்டுமே இணை சேரும். வேறு எந்த ஆண் கீரிகளையும் பெண்களுடன் இணை சேர அவை அனுமதிப்பதில்லை. அப்படி எந்த ஆணாவது இணை சேர முயன்றால் 'சண்டையிட்டு" விரட்டிவிடும். கீரிகளின் இனத்தில் இருக்கும் பெண் கீரிகளால், ஆணை மீறி எந்தச் செயலையும் செய்து விட முடியாது. 24 மணி நேரத் தலைவன் கண்காணிப்பிலேயே அவை இருக்கும். பெண்ணின் கர்ப்ப காலங்கள் 60 நாள்களிலிருந்து 70 நாள்கள் வரை, குழுவில் இருக்கிற எல்லாப் பெண் கீரிகளும் ஒருசேரவே குட்டிகளை ஈனும். அதுவரை குழுவில் இருக்கும் கீரிகள் யாருக்கும் ஆபத்து இல்லை. கதையில் இதற்குப் பிறகுதான் உயிர் பிழைத்திருத்தல் பற்றிய பக்கங்கள் ஆரம்பிக்க இருக்கிறது.


புதிதாகப் பிறந்த குட்டிகள் 4 வாரங்கள் வரை கறையான் புற்றிலேயே வசிக்கும். ஒரு கறையான் புற்றில் அல்ல, மூன்று நாள்களுக்கு ஒருமுறை கீரிகள் தங்களுடைய இருப்பிடத்தை மாற்றிக்கொண்டே இருக்கும். காட்டு நாய்களிடமிருந்து தப்பிப் பிழைக்க வேண்டுமானால் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். உயிர் பிழைத்திருக்கும் விசயத்திலும் குட்டிகள் விசயத்திலும் காட்டைப் பொறுத்தவரை சிங்கமும் ஒன்றுதான், கீரியும் ஒன்றுதான்.

ஒரு பிரசவத்தில் 2 முதல் 6 குட்டிகள் வரை பெண் கீரி ஈனும். ஒரே சமயத்தில் குழுவில் பத்திலிருந்து பதினைந்து குட்டிகள் வரை புதிதாகப் பிறக்கின்றன. இருக்கும் எல்லாக் குட்டிகளுக்கும் உணவளிப்பது என்பது கடினமானது என்பதால் குழுவில் இருக்கும் பெண் கீரிகள் சண்டையிட ஆரம்பிக்கின்றன. சில சண்டைகள் இறப்பில் முடியும். குழுவில் இருக்கிற பொதுவான ஒரு பெண் கீரியை, குட்டிகளின் பாதுகாப்புக்கு விட்டுவிட்டு மற்றக் கீரிகள் இரை தேட வெளியே செல்கின்றன.

பாதுகாப்பிற்கு இருக்கும் பெண் கீரியே குட்டிகளுக்கு உணவைப் பகிர்ந்தளிக்கும் பணியைச் செய்கின்றன. கிடைக்கும் உணவு குட்டிகளுக்குப் போதுமானதாக இருக்கும் என்று உறுதியாகச் சொல்லிவிட முடியாது. நான்கு வாரங்கள் கழித்து கணக்குப் பார்க்கும் பொழுது பிறந்த கீரிக் குட்டிகளில் பாதியே பிழைத்து இருக்கும்.

கீரிகளுக்கு ஆபத்து எந்த வழியில் வரும் என்றே சொல்லிவிட முடியாது. கழுகுகள், காட்டு நாய்கள், சிறுத்தை, நிலத்தில் வாழும் ஹோர்ன்பில் என வலிமையான எல்லா விலங்குகளுமே எதிரிகள்தாம். பலம் பொருந்திய எதிரிகளிடமிருந்து தப்பிப் பிழைக்க, ஏதோ ஒரு சின்ன விசயம் எல்லா உயிரினங்களுக்கும் உதவியாக இருக்கும். கீரிப்பிள்ளைகளுக்குக் கறையான் புற்றுகள் உயிர் பிழைத்திருக்க உதவி புரிகின்றன. எவ்வளவு பெரிய விலங்கு துரத்தினாலும் சட்டென்று அதற்குள் புகுந்து விடுகின்றன. ஆனால், எல்லா நேரங்களிலும் கறையான் புற்றுகள் உதவி செய்வதில்லை. உயிர் பிழைத்திருத்தலில் தன்னை மட்டும் சார்ந்திருப்பதில்லை சுற்றி இருக்கும் எல்லா உயிரினங்களையும் சார்ந்தது.

சிறிய கரும்பருந்து (BLACK SHOULDERED KITE) பறவை இனம் இரையாக எலி, புழு, பூச்சிகளை உண்ணக் கூடியது. தரையில் இரையைக் கண்டால், அதற்கு நேராக வானில் தன்னை நிலை நிறுத்தி இரையைக் கண்காணிக்கும் வழக்கத்தை இயல்பாகக் கொண்டது. இந்தப் பழக்கத்தை கீரிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. பறவை வானில் எங்கு தன்னை நிலை நிறுத்தி இருக்கிறதோ, அங்கே குடும்பமாய்ப் படையெடுத்து அங்கிருக்கிற இரையை உணவாக்கிக் கொள்கின்றன. சில சமயங்களில் விலங்குகளின் உயிர் பிழைத்திருத்தலிலும் 'சூது கௌவும்'.



இயல்பாக புழு, பூச்சிகள்தாம் கீரிகளுக்கு உணவாக இருந்தாலும், பாம்புகள் கிடைத்தால் மிக்க மகிழ்ச்சிதான். பாம்பு கீரியைப் பார்த்து அதி வேகமாகச் சீறும் அச்சுறுத்தும் படமெடுக்கும். அநேகமாய் பாம்பு எடுக்கிற கடைசிப் படம் அதுவாகத்தான் இருக்கும். கீரி அவ்வளவு எளிதில் பாம்புகளிடம் அடிபணிந்து ஓடுகிற உயிரினம் இல்லை. பாம்புகளின் விஷம் கீரிகளின் தோல் தடிமனையும் அதன் அடர்த்தியையும் தாண்டி எதுவும் செய்து விட முடியாது. மேலும் உடலிலுள்ள அசிட்டைல்கோலின் என்னும் வேதிப்பொருள் பாம்பின் நஞ்சினை எதிர்க்கும் திறனைக் கொடுக்கிறது. அதனால்தான் கீரிகள், பாம்புகள் இருக்கிற களத்தில் துணிந்து இறங்கி விடுகின்றன. அதிலும் குழுவாக இருக்கும் கீரிகளிடம் ஒரு பாம்பு சிக்கிவிட்டால் இரண்டொரு நிமிடங்களில் சிக்கி சின்னாபின்னமாகிவிடும். அது ராஜ நாகமாக இருந்தாலும் சரி, கறுப்பு மம்பாவாக இருந்தாலும் சரி.

இணையத்தில் இருக்கிற எல்லாக் காணொலிகளிலும் கீரியிடம் சிக்கிய பாம்புகள் தப்பிப் பிழைக்கவே முயல்கின்றன. ஆனால், தப்பித்து விடுவதில்லை. 'ஈசலுக்கு றெக்க முளைச்சா பறந்தே சாகும்' என்றொரு பழமொழி உண்டு. மழைகாலங்களில் புதிதாக ரெக்கை முளைக்கிற ஈசல்கள் ஆண், பெண் என ஆயிரக்கணக்கில் பறக்க ஆரம்பிக்கும். ஒட்டு மொத்தமாகப் பறக்க ஆரம்பிக்கிற எல்லா ஈசல்களும் மழைகால உயிர் வாழ்தலில் கீரிப்பிள்ளைகளுக்கு 'போனஸ்' உணவு.

உயிர் பிழைத்திருத்தல் விடயத்தில் காட்டுப் பன்றிகள் கீரிப்பிள்ளைகளுக்குத் தூரத்து உறவினர் போல செயற்படுகின்றன. காட்டுப் பன்றியின் உடலிலுள்ள உண்ணிகள், புழுக்கள் ஆகியவற்றைக் கீரிப்பிள்ளைகள் உணவாக எடுத்து பன்றியின் உடலைச் சுத்தம் செய்துவிடுகின்றன. முன் பத்தியில் கூறியது போல 'உயிர் பிழைத்திருந்தல் தன்னை மட்டும் சார்ந்திருப்பதில்லை. சுற்றி இருக்கிற எல்லா உயிரினங்களையும் சார்ந்தது."

கரம்போர்ட் விளையாட்டில் கறுப்பு வெள்ளை காய்களைவிட சிவப்பு காய்தான் முக்கியத்துவம் வாய்ந்தது. சிவப்பை யார் தக்கவைக்கிறார்களோ அவர்களுக்கே சற்று பலம் கூடும். உயிர் பிழைத்திருத்தலும் கரம்போர்ட் விளையாட்டைப் போன்றதுதான். உயிர் பிழைத்திருக்கும் விடயத்தில் காட்டில் யார் சிவப்பைக் கைப்பற்றுகிறார்கள் என்பது விடயமல்ல, யார் சிவப்பைக் கொல்கிறார்கள் என்பதில்தான் இருக்கிறது.



# கோப்பாய் அரண்மனை

வரலாற்றுப் பழமை வாய்ந்த கோப்பாய் சங்கிலியன் கோட்டை கோப்பாய் சந்தியில் இருந்து வடக்காகச் சில யார் தூரத்தில் வலப்பக்கமாக சற்று உள்நோக்கி அமைந்துள்ளது. யாழ்ப்பாண அரசர் காலத்தில் - குறிப்பாக சங்கிலி மன்னன் ஆட்சியில் இது ஒரு முக்கிய பாதுகாப்பு அரணாகவும் அரச மையமாகவும் திகழ்ந்தது.

எனினும் அண்மைக் காலங்களில் இடிக்கப்பட்டு அவ் இடங்களில் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியிருந்த கட்டிடப் பகுதிகள் கூட இடிக்கப்பட்டு வேறு தேவைகளிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் அரணின் சுற்றாடலில் கிணறு வெட்டிய போதும் வீடு கட்ட அத்திவாரம் வெட்டிய போதும் பழமையான கலைச் சின்னங்கள் வெளிவந்தன என அறிய முடிகின்றது.

கலாநிதி இரகுபதி இங்கு பரவலாகக் கிடைத்த மட்பாண்டங்களை ஆய்வு செய்து அவற்றின் காலம் யாழ்ப்பாணம் அரசு தோன்றுவதற்கு முற்பட்டதாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். (ரகுபதி 1987) இக் காலக்கணிப்பு யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னரே இவ் இடத்தில் செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந்ததைக் காட்டுகிறது.


# ஞானப் பள்ளு


ஞானப் பள்ளு போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த இலக்கியங்களில் ஒன்றாகும். இதை வேதப் பள்ளு என்றும் அழைப்பர். கத்தோலிக்க சமயத்தைப் புகழ்ந்து, இயேசுநாதரை பாட்டுடைத் தலைவராக கொண்டு எழுந்த இந்நூலின் முக்கிய நோக்கம் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதுதான்.

இதற்காகவே சாதாரண மக்களை எளிதில் சென்றடையும் வடிமான பள்ளு பிரபந்த முறைமையை ஆசிரியர் கையாண்டுள்ளார். ஆனால் இந்நூல், பள்ளுப் பாட்டு மரபுக்கு புறம்பான அறிவுறுத்தற் பாடல்கள் காட்டி நிற்கும். ஏனைய பள்ளுப் பிரபந்தங்களில் வரும் பாத்திரங்களை போல இதிலும் மூத்தபள்ளி, இளையபள்ளி, பள்ளன், பண்ணைக்காரன் ஆகிய நாலு பாத்திரங்களே இடம்பெற்றுள்ளன.

ஆனால் மூத்தபள்ளி, பள்ளன் ஆகிய இருவரும் இயேசுநாதரின் பிறப்பிடாகிய ஜெருசலேம் நாட்டவராகவும், இளைய பள்ளி கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடமாகிய உரோமாபுரி நாட்டவளாகவும் பண்ணைக்காரன் உரோமாபுரி எனும் பண்ணைக்கு உரிமையாளனாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இந்நூலாசிரியர் யார் என்பது இந்நூல் வாயிலாகவோ பிற சான்றுகள் மூலமாகவோ அறியக் கிடைக்கவில்லை.

இந்நூலில் வரும், "பேரான பாராளும் பிடுத்துக்கால் மனுவென்றன் பிறதானம் வீசவே - கூவாய் குயிலே" எனும் பாடலைக் கொண்டு இது போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த நூல் என்று கணிக்கப்படுகின்றது. இதனால் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த 1621 - 1658 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் இந்நூல் தோற்றம் பெற்றதெனக் கொள்ளலாம்.





# பாக்குவெட்டி

எம் முன்னோர்களின் அற்புதமான கண்டு பிடிப்புகளில் பாக்கு வெட்டியும் ஒன்று. பாக்கை வெட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட இக்கருவி பல்வேறு வடிவங்களில் கலை நயத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. விருந்துகளுக்குச் சென்றால் கண்டிப்பாக வெற்றிலை, பாக்கு போட்டுக் கொள்ளுங்கள் என்று கூறுவார்கள்.

பாக்கில் உள்ள குரோமியம் உப்பு திடீரென்று வரும் மயக்கத்தையோ, இரத்தக் கொதிப்பையோ வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது. முழுப்பாக்கை வெட்டி வெத்திலையில் வைத்து மடித்து சிறிது சுண்ணாம்பு, புகையிலை துண்டும் சேர்த்து மெல்லும் வழக்கம் இன்றும் சில நிகழ்வுகளில் காணக்கூடியதாக உள்ளது. மறக்க முடியாத இந்த பாக்கு வெட்டியின் பாவனை தற்போது குறைந்து விட்டது எனினும் கிராமப்புறங்களில் முதுசொமாக இன்றும் பாவிக்கிறார்கள்.

# குஞ்சு

குஞ்சு என்றால் "சிறிய" அல்லது "சிறியது" என்பதற்கு இணையான சொல்லாகும். பறவைகளின் குழந்தைப் பருவத்தை "குஞ்சு" என்பதன் பொருளும் சிறியது அல்லது சிறிய பருவத்தைக் கொண்டது என்பதே ஆகும்.

"குஞ்சு குருமன்கள்" என்பதும் "சின்னஞ் சிறிசுகள்" அல்லது "சின்னஞ் சிறியவர்கள்" எனப் பொருள் படுவதனையும் பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தில் பேச்சு வழக்கில் "என்ர செல்லம்", "என்ர குஞ்சு" என பெரியவர்கள் சிறிய குழந்தைகளை அன்பாகவும் செல்லமாகவும அழைத்தனர்.

இச்சொல் உறவுமுறைச் சொற்களாகவும் பயன்படுகின்றது. முனன்ர் தகப்பனை ஐயா என்று அழைக்கும் பழக்கம் இருந்தது. இதுபோன்று, தகப்பனின் தம்பியை "குஞ்சையா", "குஞ்சியப்பு", "குஞ்சையர்" போன்ற சொற்களால் அழைக்கும் வழக்கு அண்மைகாலம் வரை இருந்தது.

தாயின் தங்கையை, அதாவது சிறிய தாயை "குஞ்சம்மா", "குஞ்சாச்சி" என்றும் அழைக்கும் வழக்கு அண்மைக்காலம் வரை இருந்தது.






# நெல்லிரசம்

நெல்லிரசம் என்பது நெல்லிக்காயோடு, சீனி, நிறமூட்டி ஆகியவை சேர்த்து செய்யப்படும் ஒரு குடிபானம் ஆகும். நெல்லிரச உற்பத்திக்கு யாழ்ப்பாணத்தின் தோலகட்டி பிரதேசம் புகழ்பெற்றது. யாழ்ப்பாணத்தில் உற்பத்திசெய்யப்படும் நெல்லி ரசத் தயாரிப்புகள் இலங்கையில் பிற பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

# விவசாயத்தில் முதல் 5 நாடுகள்



எந்தவொரு நாட்டுக்கும் விவசாயம் மிகவும் முக்கியமான தொழில். ஒரு நாட்டின் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றுக்கு முதுகெலும்பு விவசாயம் மட்டும்தான். அவ்வாறு உள்நாட்டு உற்பத்தியில் அதிகமான பங்களிப்பை அளிக்கும் ஐந்து நாடுகள் பற்றிப் பார்க்கலாம்.

**1. சீனா**

சீனாவில் சுமார் 136 கோடி மக்கள் வாழ்கின்றனர். மொத்தம் 95 இலட்சம் ச.கி.மீ பரப்பளவைக் கொண்டது. அங்குள்ள நிலத்தில் 54.8 வீதம் நிலம் விவசாயத்துக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இங்குள்ள மக்களில் 35 - 40 வீதம் பேர் நேரடி விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். சீனாவின் வேறுபட்ட காலநிலைகளின் காரணமாக இங்குப் பல்வேறு பயிர்கள் விளைகின்றன. விளையும் பொருள்களில் 20 வீத பொருள்களானது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவேதான், சீனா உலகின் பணக்கார விவசாய நாடு என அழைக்கப்படுகிறது. சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வருமானத்தில் 160 இலட்சம் கோடி ரூபாய் விவசாயம் மூலமாக ஈட்டப்படுகிறது.

**2. இந்தியா**

ஆசியாவின் தென்பகுதியில் அமைந்துள்ள இந்தியா 32 இலட்சத்து 82 ஆயிரம் ச.கி. மீ பரப்பளவில், சுமார் 126 கோடி மக்கள் வாழ்கின்றனர். இந்தியாவில் உள்ள 60.5 வீத நிலம் விவசாயத்துக்காகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், 50 வீத மக்கள் விவசாய நடவடிக்கை தொடர்பான வேலைகளில் ஈடுபடுகிறார்கள். இந்தியா உற்பத்தி செய்யும் வேளாண் பொருள்களில் 85 வீதம் பொருள்கள் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. மீதமுள்ள பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 67 இலட்சம் கோடி ரூபாயை விவசாயம் மூலம் இந்தியா ஈட்டுகிறது.

**3. அமெரிக்கா**

அமெரிக்க மக்கள் தொகை சுமார் 31 கோடி. இங்குள்ள மொத்த நிலப்பரப்பில் 44 வீத நிலம் விவசாயத்துக்காகப் பயன்படுத்தப்படுகிறது. விவசாய உற்பத்தியில் உற்பத்தித்திறன் அதிகமாகக் கொண்ட நாடுதான் அமெரிக்கா. அதாவது, ஒவ்வொரு சராசரி விவசாயியும், 155 அமெரிக்கர்களுக்கு உணவளிக்கிறார். பயிர் சுழற்சி உயிரித் தொழில்நுட்பம் மூலமாக இந்நாடு வெற்றியைக் கண்டுள்ளது. உற்பத்தியாகும் பொருட்களில் 23 வீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தன் மொத்த வருமானத்தில் 32 லட்சம் கோடி ரூபாய் வருவாயை விவசாயம் மூலமாக ஈட்டுகிறது.

**4. பிரேசில்**

தென் அமெரிக்காவின் இதயம் என அழைக்கப்படுவது பிரேசில். 86 லட்சம் சதுர கி.மீ பரப்பளவில் சுமார் 20 கோடி மக்கள் தொகையுடன் காணப்படுகிறது. மொத்த நிலப்பரப்பில் 33 வீத இடங்களில் விவசாயமும், 15 வீத இடங்களில் மக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களையும் செய்கின்றனர். உலகில் சோயா பீன்ஸ் மற்றும் சோளம் உற்பத்தி செய்யும் நாடுகளின் தரவரிசையில் பிரேசிலுக்கு 2 - வது இடம். பருத்தி உற்பத்தியில் 5 ஆவது இடம் வகிக்கும் நாடும் பிரேசில்தான். பிரேசிலின் உள்நாட்டு உற்பத்தி வருமானத்தில் 20 லட்சம் கோடி ரூபாய் வேளாண்மை மூலம் ஈட்டப்படுகிறது.

**5. இந்தோனேசியா**

19 லட்சம் ச.கி.மீ பரப்பளவைக்கொண்ட தீவுப்பகுதி. 25.5 கோடி மக்கள் வசிகின்றனர். இந்தோனேசியா அதன் இயற்கை முறைகளை நம்பி, இயற்கை உரம், இயற்கை பூச்சி விரட்டி ஆகியவற்றை அதிகமாகப் பயன்படுத்துகிறது. உலகின் அதிக கரும்பு, இறப்பர் மற்றும் புகையிலை பயிர்களைப் பயிரிடும் நாடுகளில் முன்னிலை வகிக்கிறது. இந்நாட்டில் மொத்த வருமானத்தில் 20 லட்சம் கோடி ரூபாய் வேளாண்மை மூலமாகக் கிடைக்கிறது.

# பிளாஸ்ரிக்கை அழிக்கும் காளான்

கடந்த 2012 ஆம் ஆண்டில், யேல் பல்கலைக்கழக மாணவர்கள் அமேசன் மழைக் காடுகளில் வளரக்கூடிய, 'பெஸ்ராலோப்டியோப்சிஸ் மைக்ரோஸ்போரா' (Pestaloptiopsis Microspora) என்ற ஒரு வகைக் காளானால் பிளாஸ்ரிக்கை மட்க வைக்க முடியும் எனக் கண்டு பிடித்தனர். இந்தக் காளான், ஒட்சிசன் இல்லாத இடத்திலும் வளரக்கூடியது.

இது மனிதர்கள் சாப்பிடக் கூடியதாகவும் பிளாஸ்ரிக்கை அழிக்கக்கூடியதாகவும் உள்ள காளான்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் காளான்கள், சோம்பின் சுவை கொண்டிருக்கின்றன. பிளாஸ்ரிக்கை மட்க வைக்கப் பல நூறு ஆண்டுகள் ஆகும் என்ற நிலையை மாற்றியிருக்கின்றன, காளான் பூஞ்சணங்கள்.



**ஏர் பின்னது உலகம்**



## இயற்கைக்கு வழி

### அரப்பு மோர் கரைசல்



புளித்த மோர் - 5 லீற்றர், இளநீர் - 1 லீற்றர், அரப்பு இலைகள் - 1 முதல் 2 கிலோ, 500 கிராம் பழக்கழிவுகள் அல்லது பழக்கழிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட 1 லீற்றர் சாறு ஆகிய பொருட்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கரைசல் கலவையை மண்பானை அல்லது பிளாஸ்ரிக் வாளியில் ஒரு வார காலத்திற்கு வைத்திருக்க வேண்டும். இந்த ஒரு வார காலத்தில் நொதிக்கத் தொடங்கி விடும். இந்த நொதித்த கரைசலே அரப்பு மோர் கரைசல் ஆகும். அரப்பு இலைத் தூள் பயன்படுத்துவதாக இருந்தால், பழக் கலவைகளுக்குப் பதிலாக பழச்சாறு பயன்படுத்த வேண்டும். நான்கு பொருட்களையும் கலந்து அதனை ஏழு நாட்களுக்கு நொதிக்க விட வேண்டும். ஒரு லீற்றர் அரப்பு மோர் கரைசலுடன் 10 லீற்றர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

### திருப்பித் திருப்பி அவர் வேண்டாம் எண்டு சொல்லுறம் கேக்கிறியள் இல்லை

பொதுவாத் தமிழ் ஆக்களுக்கு அவர் இந்த நாட்டிலை எந்தப் பதவிக்கு வாறதும் விருப்பமில்லை. அதுவும் ஜனாதிபதியா வாறதெண்டதிலை எங்களுக்குத் துளியும் விருப்பமில்லை. அப்ப அவர் அதுக்கு ஆசைப்படுகிறது தப்பெல்லே. அது அவருக்க விளங்க வேணும். தன்னைச் சனத்துக்குப் பிடிக்கேல்லை எண்டதை அவர் விளங்கிக் கொள்ள வேணும். என்னட்டைக் கேட்டால் ஒதுங்கிறதுதான் நல்லதெண்டு சொல்லுவன்.

இப்ப வன்னி ஶ்ரீதரன் உதைத்தான் சொல்லுறார். நாங்கள் வரவு செலவுத் திட்டத்துக்க ஆதரவு வழங்கேல்லை எண்டு வைச்சுக் கொள்ளுவம். உடனை அது தோக்கும். தோத்தால் அரசாங்கம் கவிழும். அரசாங்கம் கவிண்டால் உடனை ராஜபக்ஷ குடும்பம் அரசாங்கத்துக்கை உள்ளிடும். அப்பிடி உள்ளிட்டால் மகிந்தா பவறுக்கு வருவார். வந்து என்ன செய்வர்? "பழைய குருடி கதவைத் திறவெடி" எண்ட மாதிரி இந்த நாட்டைக் குடும்பச் சொத்தா மாத்திப்போடுவர். அப்ப எல்லாம் பிழைக்கும். ரணில் பிழை சரி எண்டதுக்கு அப்பாலை மகிந்தா பவருக்க வரப்பிடாது.

அதாலைதான் கூட்டமைப்பு அரசாங்கத்தை கவிழவிடாமல் இன்னும் தாங்கிக் கொண்டிருக்கு. அதாலை தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பற்றித் தேவை இல்லாத கதை கதைக்கினம். பின் கதவாலை சப்போட்டைக் குடுக்கினம். கையை நனைச்சுப் போட்டினம். காசை வாங்கிப் போட்டினம். அப்பிடி..இப்பிடி எண்டு தேவை இல்லாத கதைபேச்சு. தந்தை செல்வா இருந்த காலந்தொட்டு இண்டைக்குவரையும் உப்பிடித் தேவை இல்லா கதைகதைக்கிற ஆக்கள் இருந்து கொண்டுதான் இருக்கினம். கேட்டால் அதுக்கு அப்பிடி...இப்பிடி எண்டு வியாக்கியானம் வேறை.

ஒரு மாதம் ஜெனீவா எண்டு வாணால் போகக் கத்திக் குளறி எல்லாற்றை பொழுதும் போட்டுது. இஞ்சை இருந்த கன சனம் போய் உந்தச் சாட்டிலை ஜெனீவாவைப் பாத்திட்டு வந்திட்டினம். ஜெனீவா மாநாடு நடக்கிறதுக்கு கொஞ்ச நாளைக்கு முன்னம் யாழ்ப்பாணம் பண்ணையிலை இருந்து வெளிக்கிடுற பஸ்ஸடியிலை போய் நிண்டால் தெரிஞ்சிருக்கும். ஆரைக் கேட்டாலும் துலைக்கே போறியள் எண்டு கேட்டால்? நாங்கள் ஜெனீவாக்குப் போறம் எண்டு ... உதிலை கிடக்கிற யாழ்ப்பாணம் ரவுணுக்குப் போட்டு வாறம்.. எண்டு சொல்லுற மாதிரிச் சொல்லிப் போட்டுப் போனவை. இப்ப வந்திட்டினம் எண்டு நினைக்கிறன். இனிமேல் றோட்டிலை அவையளைக் கண்டால் கேக்க வேணும் ஏன் போனனியள்? அங்கை என்ன செய்தனியள்? என்ன நடந்தெண்டு?

இலங்கையிலை உள்ள குஞ்சு குருமனுக்கும் தெரியும் ஜெனீவாவிலை ஒண்டும் நடவாதெண்டு. இலங்கை அரசு தாங்கள் நீதி விசாரணை நடத்தமாட்டினம் எண்டு சொன்னால் அவையளாலை ஒண்டும் செய்யேலாது எண்டதும் தெரியும். மனுசர் மக்களுக்கு எண்டால் மனச்சாட்சி இருக்கும். மரியாதை தெரியும். உலுத்தன் மாதிரி நடக்கிறவனுக்கு என்ன தெரியும்? அவன் மானம் மரியாதையைப் பற்றி யோசிப்பனோ?

அப்ப விளக்கமில்லாமல் ஜெனிவா வருகுது...வருகுது... எண்டு பூச்சாண்டி காட்டி என்ன நடக்கப் போகுது? ஆரை வெருட்டப்போறம்? சும்மா சனத்தை ஏமாத்தேலாது எண்டு சொல்லிப்போட்டு அதை இதைச் சொல்லப்பிடாது. எத்தினை நாளைக்குத்தான் ஏமாத்தலாம் எண்டு நினைக்கிறியள்?

சிங்கள இனவாதத்தைக் கக்கிக்கக்கி அரசியல் செய்யிற ஆக்களுக்கு அது மாதிரி ஒராள்தான் அரசியல் செய்யிறதுக்கு வரவேணும். சும்ம கதைச்சுக் கொண்டு இருக்கிறதை சரிவராது. அப்ப ஶ்ரீதரன் சொல்லுறமாதிரி இப்ப இருக்கிற அரசாங்கத்துக்கு மிண்டு எவ்வள காலத்துக்குக் குடுத்து ராஜபக்ஸவை வராமல் பண்ணுறது? ஒரு கொஞ்ச காலத்துக்குச் செய்யலா பிறகு என்ன செய்யப் போறியள் அப்ப சிங்களவர் பக்கத்திலை இருக்கிற நல்ல சனத்தைச் சேத்து வோட்டுப்போட்டு நல்லவையளைக் கொண்டுவரப் பாருங்கோ. அதை விடடிட்டு உங்கடை அரசியலையும் அடாவடித்தனத்தையும் பற்றி ஆரிட்டைச் சொல்லி அழ?

- கோளரங்க

---

## கதைமாந்தர்களின்....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் இளவயதில் விதவையானதால் குடும்பத்திற்கு பாரமாக இருக்கிறோமே என்ற நினைப்பு அவளைச் சதா வருத்திக் கொண்டே இருந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திற்கு வந்து சில மாதங்களில் உயர்தரப் பரீட்சையை தனிப் பட்ட முறையில் தோற்றுவதற்கு அவள் முடிவு செய்கிறாள். அதற்கு கிராம சேவகரும் கையொப்பம் இடவேண்டி இருந்தது. அவளது சூழ்நிலையை புரிந்து கொண்டதோடு மாத்திரமல்லாமல் விடாமுயற்சியை கண்டு வியந்த படி அவர் கையொப்பம் இட்டுக் கொடுக்கின்றார். வன்னியில் முதலில் பயோ சயன்ஸ் படிச்சாலும் தற்போது கலைத்துறையைத் தெரிவு செய்து வீட்டிலிருந்தே படித்து பரீட்சையை எதிர்கொள்கின்றாள். சில மாதங்களின் பின்னர் வெளிவந்த பரீட்சை முடிவுகளின் பிரகாரம் அவள் பல்கலைக் கழகத்திற்கு தகுதிபெற்றும் விடுகின் றாள். ஆனாலும் தான் ஒரு விதவை என்பதனால் பல்கலைக்கழகச் சூழலை எதிர்கொள்வதில் அவளுக்கு ஒருவித தயக்கம் ஏற்படுகின்றது. பல்கலைக்கழத்திலே பெரும்பாலும் கூத்தும் கும்மாளமுமாக இருப்பதனால் அங்கு சென்றால் தனது வேதனை இன்னும் அதிகரிக்கும் என அவள் நினைக்கின்றாள். ஆனாலும் அவளுக்கு கல்வியியல் கல்லூரிக்குச் செல்வதில் விருப்பம் இருப்பதை வெளிப்படுத்துகின்றாள். கல்வியியல் கல்லூரியில் கூத்தும் கும்மாளமும் இல்லையா என்று கிராமசேவகர் கேட்டதற்கு அவள் ஒரு பதிலும் சொல்கின்றாள். அந்தப் பதிலை அவள் மாமன் கிராம சேவகரிடம் சொல்கின்றார்.

'கம்பஸைவிட கொலிச் பரவாயில்லையாம். ரீச்சர்மாரை உருவாக்கிற இடம் எண்டபடியால் டிசிப்பிளின் இருக்கும் எண்டுறாள். அதோட ஹொஸ்டலில தான் கட்டாயம் நிக்க வேணும் என்கிறதால அவள் அதை விரும்பிறாள். குறைந்தபட்சம் தெரிந்த முகங்களிலிருந்து தள்ளி இருக்கலாம் எண்டதுக்காவது அவள் கொலிச்சை விரும்புறாள்'

அவள் மிகத்தெளிவாகவே இருக்கின்றாள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்த கிராமசேவகருக்கு கொலிச்சில படிக்கிறதுக்கு கலியாணம் செய்திருக்கக் கூடாதாம். அன்மறீட் சேட்டிபிக் கெட் கேட்கினம் என்று சொன்னது தான் அவருக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி இருந்தது.

'கலியாணமான பிள்ளையெண்டு தெரிந்தும் நான் என்னெண்டம்மா கலியாணம் ஆகவில்லை எண்டு சேட்டிபிக்கெட் தாறது. இது எனது தொழிலுக்கு மனதறிந்து செய்கின்ற துரோகம்அல்லவா? எந்த நொடியில் என் மேலதிகாரிகள் அவ்விடயத்தை கண்டுபிடித்தாலும் என் வேலை போய்விடப் போவது உறுதி' என்று முதலில் அவர் மனம் கொந்தளித்தது. அத்தோடு வன்னியில் நடந்த கலியாணம் தானே.. யாருக்குத் தெரிந்து விடப் போகுது.. கையொப்பமிட்டு கொடுக்கலாம். ஆனால் என் மேல் பொறாமை பிடித்தவர்கள் என்னை எப்படி மாட்டி விடுவது? என்று காத்திருப்பவர்கள் மத்தியில் இந்தச் செய்தி எட்டிவிட்டால்... கடவுளே இவர்களுக்கு என்னால் எப்படி உதவமுடியும்' என்று கிராமசேவகரது மனம் தத்தளிப்பதை, அவளது தனிப்பட்ட வாழ்க்கையை அறிந்தும் உதவி செய்ய இயலாது அந்தரப்படுவதை அற்புதமாக தாட்சாயணி சித்திரித்துள்ளார்.

இறுதியில் அந்தக் கிராமசேவகர் பாத்திரம் எத்தகைய முடிவை எடுத்தது என்பதை கதை முடிவில் இவ்வாறு சித்திரித்திருப்பார் தாட்சாயணி.

'சட்டென்று எனக்கு அந்தச் சந்தேகம் தோன்றியது. அவளுக்கு இப்போது இருபது வயதென்றால் கூட திருமணம் நடந்தேறிய காலப்பகுதியில் பதினெட்டு வயது தாண்டியிருக்குமா...? என்றால் சந்தேகம் தானே. எப்படி திருமணப் பதிவு நட்ந்திருக்கும்..? நினைவில் பளிச்சிட சட்டென்று கேட்டேன்.

"கலியாணம் பதிஞ்சதோம்மா?" அவள் கண்கள் கலங்கக் கூறினாள் பதியேல்லை. கோயிலிலை தான் தாலிகட்டின.

'அப்பாடா' என மூச்சு விட்டேன்.

'கடிதத்தை தாரும் கையெழுத்து வச்சுத்தாரன்' என்றேன்.

அவள் கையோடு கொண்டு வந்திருந்த கடிதத்தை தந்தாள். அதன் கீழ் அவளுக்கு திருமணமாகவில்லை என்பதை உறுதிப்படுத்; கையொப்பமிட்டு எனது இறப்பர் ஸ்ராம்மை அடித்து அவளிடம் கொடுத்தேன். என்று கூறும்பொழுது அந்த கிராமசேவகர் பாத்திரம் நம் மனதிலும் உயர்ந்து நிற்கின்றது.

நிவாரணக் கிராமங்களில் வாழ்ந்த அவல நிலை, எத்தகைய சூழலில் இளவயது திருமணங்கள் வன்னியில் நிகழ்ந்தன, இளவயத விதவைகளுக்கு ஏற்படும் நெருடிக்கடிகள் போன்ற யுத்தம் ஏற்படுத்திய வடுக்களின் குறுக்குவெட்டுமுகமாக இக்கதை விளங்குகிற; எனலாம். தாட்சாயணியின் சிறுகதைகள் குறித்து தாமரைச்செல்வி 'காலாதி காலமாக முரண்பாடான கருத்தியலும் பின்னடைவான சிந்தனைகளும் போர்க்கால இடர்களும் கொண்ட சமூகத்தில் போராடி வாழ்கின்ற கதாபாத்திரங்கள் அவருடையன' என்று குறிப்பிட்டதை ஊர்ஜிதப்படுத்துவதைப் போல இக்கதையில் வரும் தணிகா என்ற பெண்பாத்திரம் விளங்குகின்றது.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

71

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

அவர்கள் மருத்துவ அணியை நெருங்கியபோது, "ரூபாக்கா", என்றவாறே ஓடிவந்து ஒரு இளம் போராளி அவளைக் கட்டிப் பிடித்தாள்.

ரூபா ஆச்சரியத்துடன், "ஏய் ரேணுகா! எப்ப இயக்கத்துக்கு வந்தனீ?" என வியப்புடன் கேட்டாள்.

"இப்ப... மூண்டு மாதம் தானக்கா...", என்றாள் ரேணு.

"அப்ப உன்ர படிப்பு?"

"நாலு வருசம் முடிச்சிட்டன். இன்னும் ஒரு வருஷம் இருக்கு. லீவுக்கு வீட்டை வந்தாப்போலை என்ரை மருத்துவப் படிப்பு போராட்டத்துக்கு உதவட்டும் எண்டு இயக்கத்திலை சேர்ந்திட்டன்.

அவள் கொழும்பு மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவி என்பதை ரூபா சிவத்துக்கு விளங்கப்படுத்தினாள்.

"பூப்போலை வளர்ந்தனீ... எப்பவும் ஸ்ரைல் பண்ணிக் கொண்டு திரிவாய்... எப்பிடி போராளி வாழ்க்கையைச் சமாளிக் கிறாய்?" எனக் கேட்டாள் ரூபா.

"இரண்டு, மூண்டு கிழமை கஷ்டமாய்த்தான் இருந்தது. இப்ப இது நல்லாய்க் கிடக்குது", என்றாள் சிரித்துக்கொண்டே...

"சரி... சரி... நல்லாய் செய்", எனச் சிரித்தவாறே கூறிவிட்டு விடைபெற்றாள் ரூபா.

எமது மக்களின் விடுதலை வேட்கையையும் அர்ப்பண உணர்வையும் நினைத்த போது சிவத்தின் உடல் புல்லரித்தது. எல்லா அணிப் பொறுப்பாளர்களும் போராளி களும் மிகவும் உற்சாகத்துடனும் கலகலப்பாகவும் இருந்தனர். ஆனால் எவருக்குமே நடக்கப் போவது என்ன என்று தெரிந் திருக்கவில்லை. சிவம் ஒரு மூத்த போராளியாதலால் அனைவரும் சிவத்தைக் கேள்விகளால் துளைக்க அவன் பதில் சொல்ல முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தான்.

அன்று மதியம், வேறு எங்கோ தயாரிக்கப்பட்ட புரியாணி பார்சல்கள் வந்தன. சாப்பாடு முடிந்த பின்பு ஐஸ்கிறீமும் வழங்கப்பட்டது. பெரும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட வுள்ள சமயங்களில் இப்படி யான சிறப்பு உணவுகள் வழங்கப் படுவதால் அவர்கள் அதுபற்றிப் பெரிதாக ஆச்சரியப்படவில்லை. பிற்பகல் மூன்று மணியளவில் ஒருங்கிணைப்புத் தளபதி, சிறப்புத் தளபதிகள், அரசியல்துறைப் பொறுப்பாளர், புலனாய்வுப் பொறுப்பாளர் ஆகியோர் வந்திறங்கினர்.

எட்டு அணிகளின் பொறுப்பா ளர்களும் ஒரு பிரத்தியேகமான இடத்துக்கு அழைக்கப்பட்டனர். முகாமின் வரைபடம் முன்வைக்கப் பட்டு முகாமின் அமைப்பு விளக் கப்பட்டது. அவர்களின் காவல் நிலைகள், கட்டளை மையம், தொலைத்தொடர்பு மையம் என்பன குறியிடப்பட்டு காட்டப்பட்டன. ஒவ்வொரு அணிகளுக்கும் அவரவர் பணிகள் விளங்கப்படுத்தப்பட்டன.

சுக்கிரனின் அணி தடையு



டைத்து உட்செல்வது எனத் தெரிவிக் கப்பட்டது.

அதாவது வேவுக் குழுவினர் முட்கம்பி வேலியை வெட்டி பாதையெடுத்து இரகசியமாக முகாமுக்குள் இறங்க அவர்கள் பின்னால் சுக்கிரனின் அணி உட்சென்று அங்கிருந்து தாக்குதலை ஆரம்பிக்க வேண் டும். அவர்கள் ஒரே நேரத்தில் தொலைத்தொடர்பு கோபுரங் களை தகர்க்க வேண்டும். வேவு அணி 'போக்கஸ்' லைட்டுக்களின் மின்சாரத் தொடர்பை துண்டிக் கும். வெளியில் நிற்கும் அணிகள் தாக்குதல் நடத்தியவாறு முகாமில் புகவேண்டும்.

சிவத்தின் அணி மூன்றுமுறிப்புக் கும் பனங்காமத்துக்கும் இடையே யுள்ள இராணுவத் தொடர்பைத் துண்டித்து அவர்களைத் தனிமைப் படுத்தி நட்டாங்கண்டல் பக்கம் விரட்டவேண்டும். சித்திராவின் அணி பாலத்திலிருந்து முன்னேறி பாண்டியன் குளத்தில் அந்த அணியை மறித்துத் தாக்கவேண் டும். மங்களாவின் அணி நவ்வியில் வைத்து இறம்பைக்குளத்துடனான தொடர்பை துண்டிக்க வேண்டும்.

திட்டங்கள் தெளிவுபடுத்தப் பட்டதும், அணிப்பொறுப்பாளர் களின் மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. இது விளையாடி விளை யாடி வெற்றிபெறக்கூடிய ஒரு சமர் என்றே அவர்கள் கருதினர். பொறுப்பாளர்களும் தளபதிகளும் வாழ்த்துக்களைத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

ஒவ்வொரு அணித் தலைவர்களும் தங்கள் அணியை பத்துப் பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு ஒவ்வொருவரை தலைமையாக நியமித்தனர். மெல்ல மெல்ல வானம் சிவக்கத் தொடங்கியது. இரவு எட்டு மணியளவில் வாகனங்கள் வந்து அனைவரையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டன. அனைவரும் பாலைப்பாணி கிராமத்தில் இறக்கப்பட்டனர். அங்கிருந்து மக்கள் பல நாள்கள் முன்பதாவே வன்னிவிளாங்குளம் பக்கமாக வெளியேறிவிட்டனர்.

ஒவ்வொரு அணிகளும் ஒவ் வொரு வேவுப் பிரிவுப் போராளி களுடன் அவர்களுக்கென வழங்கப் பட்ட இடங்களுக்குக் கால் நடையாகப் புறப்பட்டனர்.

இரவு பன்னிரண்டு மணியள வில் அவர்களது ஒவ்வொரு அணியும் நிலையெடுத்துக் கொண்டன. முகாமின் மின்சார விளக்குகள் தூரத்தே தெரிந்தன. 'போக்கஸ்' லைட்டுகளிலிருந்து அண்மையாக ஆனால் வெளிச்சம்படாத தொலைவில் நிலையெடுத்தனர். முகாமின் உள்ளே விளக்குகள் எரிந்தபோதும் படையினரின் எவ்வித நடமாட்டமும் தென்படவில்லை.

நேரம் ஒரு மணியை நெருங்கியபோது திடீரென முகாமுக்குள் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்கத் தொடங்கின. வெளியில் நின்றிருந்த அணிகள் முகாமை நோக்கிப் பாயத் தயாரானபோது திடீரென காடெல்லாம் ஒளிவெள்ளம் பாய்ந்தது.

என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளும் முன்பே நாலு பக்கங்களிலிருந்து போராளிகளை நோக்கி துப்பாக்கி ரவைகள் பாயத்தொடங்கின. தாங்கள் ஒரு பயங்கர சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டு விட்டதை சிவம் புரிந்துகொண்டான்.

எப்படியோ முகாம் தாக்கப்படப் போகிறது என்ற செய்தி படையினருக்கு எட்டிவிட்டது. அவர்கள் முகாமிலிருந்து சற்றுத் தொலைவில் மின்சார 'ப்போக்கஸ்' விளக்குகளைக் காட்டு மரங்களில் இணைத்து, அவற்றை எந்த நேரமும் ஒளிர வைக்கும் வகையில் அமைத்திருந்தனர். அவர்கள் மரங்களிலும் பற்றைகளுக்குள்ளும் இருளில் முகாமுக்கு வெளியே வந்து பதுங்கிக் கொண்டனர். தாங்கள் எதிர்பார்த்த எல்லைக்குள் போராளிகள் வரும்வரை காத்திருந்த அவர்கள், போராளிகள் வந்துசேர்ந்ததும் ஒரே நேரத்தில் விளக்குகளை ஒளிரவிட்டனர்.

இப்போ போராளிகள் பட்டப்பகல் போன்ற வெளிச்சத்தின் நட்ட நடுவில் அகப்பட்டுக் கொண்டனர். இராணுவமோ சுற்றிவர இருட்டில் நின்று வேட்டுக்களைப் பொழிந்து கொண்டிருந்தது. சிவம் நிலைமையை நன்றாக விங்கிக்கொண்டான். உடனடியாகப் பின்வாங்கி வெளிச்சத்தைக் கடந்து இருளில் வருமாறு கட்டளையிட்டான். கட்டளைப்பீடத்திலிருந்து ஏதோ ஒரு பெரிய தவறு நடந்து விட்டதாகவும் ஒவ்வொரு போராளியையும் பாதுகாப்பாக பின்வாங்குமாறு கட்டளை வந்தது. இப்போது உயிரைக் காப்பதுகூட அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# கதை மாந்தர்களின் கதை - 05

## தாட்சாயணியின் ‘பொய்மையும் வாய்மையிடத்து’

■ சி.விமலன்

ஈழத்து இலக்கியப் பரப்பில் பெண் எழுத்தாளர்களின் வரிசையில் தாட்சாயணியின் சிறுகதைகளுக்கு காத்திரமான ஓர் இடமுண்டு. போர்க்காலச் சூழலின் தாக்கம் இவரது பெரும்பாலான சிறுகதைகளில் சுவறி இருப்பதை கண்டு கொள்ளலாம். கதாபாத்திரங்களின் உணர்வுகளை நுணுக்கமாகவும் அழுத்தமாகவும் சித்திரித்து வாசகர்களிடம் உணர்வுத் தொற்றலை ஏற்படுத்தியதில் இவரின் பல சிறுகதைகள் வெற்றி பெற்றுள்ளன. ‘ஒரு மரணமும் சில மனிதர்களும்’, ‘இளவேனில் மீண்டும் வரும்’, ‘தூரப் போகும் நாரைகள்’, ‘அங்கயற்கண்ணியும் அவள் அழகிய உலகமும்’ என்ற நான்கு சிறுகதைத் தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன.

அந்தவகையில் கதை மாந்தர்களின் கதை என்ற இந்தத் தொடரில் தாட்சாயணி எழுதிய ‘பொய்மையும் வாய்மையிடத்து’ என்ற சிறுகதை குறித்த எனது பார்வையைப் பதிவிடலாம் என எண்ணுகின்றேன். ‘பொய்மையும் வாய்மையிடத்து’ என்ற இந்தச் சிறுகதை 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவரால் எழுதப்பட்ட ஒன்றாகும். இந்தச் சிறுகதை ஒரு கிராம சேவகரின் பார்வையில் சொல்லப்படுவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. கதையில் வரும் குடும்பத்தினர் முள்ளியவளையில் வசித்து வந்தனர். இறுதியுத்தத்தில் இடம்பெயர்ந்து முகாம்வாழ்க்கை வாழ்ந்த பல்லாயிரம் குடும்பங்களில் அவர்களும் அடங்கியிருந்தனர். பிறகு இணுவிலில் உள்ள தூரத்து மாமன் ஒருவரின் உதவியோடு யாழ்ப்பாணம் அனுப்பப்பட்ட மக்களோடு



‘பொய்மையும் வாய்மையிடத்து’ சிறுகதைக்காக தாட்சாயணி தகவம் பரிசு பெற்றபொழுது....

மக்களாக அந்தக் குடும்பத்தினரும் வந்துசேர்ந்தனர்.

வன்னியில் இருந்து வந்தவர்களின் விபரங்களைப் பதிவுசெய்யும் கடமையில் ஈடுபட்டுள்ள கிராமசேவகர் அந்தக்குடும்பத்தில் தாய், தந்தை, ஒரு மகன், மூன்று மகள்கள் உள்ளடங்கியதான விபரத்தை அறிந்தாலும் கதையில் சித்திரிக்கப்படும் பிரதான பெண்பாத்திரம் சோகமே உருவான வடிவில் இருப்பதற்குரிய காரணத்தை மட்டும் உடனடியாக அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. சகோதரன் தடுப்புமுகாமில் இருக்கின்ற காரணத்தினால் தான் அவள் அவ்வாறு இருக்கின்றாளோ என்று ஆரம்பத்தில் அவர் ஐயுறுகின்றார். ஆனாலும் பின்னர் அவரது மாமன் வாயிலாக அதற்கான காரணம் தெரிய வருகின்றது. அவளது சகோதரன் போர் உக்கிரமடைந்த பொழுது இயக்கத்திற்குச் சென்றதனால் மகளுக்கும் அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக குடும்பத்தினர் இளவயதிலேயே திருமணம் ஒன்றை செய்துவைத்துள்ளனர்.

ஆனாலும் ஆறேழு மாதங்களுக்குள்ளேயே குண்டு வீச்சில் அவன் இறந்து போனதால் அவளது வாழ்க்கையே இருண்டிருந்தது. அவளுக்கு குழந்தை எதுவும் இல்லாத காரணத்தினால் அவளை விதவை என்று தனிக்குடும்பமாகப் பதியாமல் தமது மகள் என்றே குடும்ப அட்டையில் பதிந்து அவளது தாயும் தந்தையும் அரவணைத்து வந்தனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)




உங்கள் ஆக்கங்களை ‘வாசிகை’, ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.



### மூன்று பிரதிகள்

இரவை மூன்று பிரதிகளாக
பிரித்து வைத்திருக்கின்றேன்
அதில் ஒவ்வொரு பிரதிக்கும்
ஒரு உயர்ந்த வேறுபாட்டைக்
கொடுத்திருக்கின்றேன்
முதல் பிரதியில்
நீங்கள் இளையராஜாவின் மெலோடியுடன்
தேநீர் அருந்திக் கொண்டே
பூமி தட்டையென
கண்டுபிடிக்க முடியும்
இரண்டாம் பிரதியில்
ஒரு தேவதையின்
முத்தக் குவளையை பருகியபடி
பூமி நீள் வடிவமென
கண்டுபிடிக்க முடியும்
மூன்றாம் பிரதியில்
நிலமுமற்ற வெளியுமற்ற
சன்னல் அறையில்
வசித்துக் கொண்டே
பூமி உருண்டை என
கண்டுபிடிக்க முடியும்.
இப்போது சொல்லுங்கள்
எந்தப் பிரதியில் வசிக்க விரும்புகின்றீர்கள்?
ஒரு பிரதியின் விலை
ஒரு கனவுத் துண்டு.

- ஏ.நஸ்புள்ளாஹ்

# சிறார் சித்திரக் கதைகள்

■ ராகவேந்திரா

எனக்குப் புத்தகங்கள் முதன் முதலில் காமிக்ஸ் வடிவிலும், பின்பு மாத நாவல்கள் வடிவிலும் அறிமுகம் ஆனது. எந்த ஒரு பெரிய விடயமானாலும் சிறிய வடிவில் தான் தொடங்கியாக வேண்டும். உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் ஒரு புதிய உலகத்தைக் காட்ட விரும்புவீர்களானால், புத்தக உலகை காட்டுங்கள். அதுவும், இந்த புத்தகம் மாதிரி ‘உலகப் புகழ் பெற்ற சிறார் சித்திரக் கதைகள்’ வழியே காட்டுங்கள். திரு. ரால்ப் மில்லர், ஜேர்மன் நாட்டில் பிறந்தவர். குழந்தை எழுத்தாளர் மற்றும் ஓவியர். இவர் எழுதிய சிறார் புத்தகம்தான் How Big Is A Foot இதனைத் தமிழில் கொ.மா.கோ.இளங்கோ மொழிபெயர்த்துள்ளார். இந்த புத்தகத்தின் கதை இதுதான்.

ஒரு நாட்டு மகாராஜா, தனது மகாராணிக்குப் பிறந்த நாள் பரிசாக ஒரு விஷேசமான பரிசினைத் தர ஆசைப்படுகிறார். அப்பொழுது தான் ராஜாவுக்கு ஒரு யோசனை வந்தது. மகாராணிக்கு ஒரு கட்டில் அரண்மனையில் இல்லை. எனவே, அவர் ஒரு அழகான கட்டிலை செய்ய தலைமை அமைச்சரிடம் உத்தரவு கொடுக்கிறார். அந்த மகாராணிக்கு தயார் செய்யப்படும் கட்டிலுக்கு முன்னாடி யாருமே கட்டிலை கண்ணால் பார்த்ததில்லை. ஏனென்றால், உலகில் அந்நாளில் கட்டில் என்ற ஒரு பொருள் இல்லை. பிறகு எப்படி கட்டில் செய்வார்கள்? கடைசியில், மகாராஜா மகாராணிக்கு பிறந்த நாள் பரிசைக் கொடுத்தாரா? அரண்மனைக்குள் என்ன நடந்தது? என்பது தான் கதையே.

நூலாசிரியர், குழந்தைகளின் கணிதத் திறனை வளர்க்க உதவும் சித்திரக் கதைகள் பலவற்றை எழுதியவர். 1962ல் வெளியான இந்தப் புத்தகம், ‘உலகின் மிகச் சிறந்த சிறுவர்களுக்கான அளவீடுகள் பற்றியதானது’ என்று இன்று வரை புகழப்படுகிறது. மேலும் ஒரு சிறப்பு என்னவென்றால், மொத்தம் 30லிருந்து 40 பக்கங்களுக்குள் கதை முடிகிறது. ஒவ்வொரு பக்கமும் மேல் பக்கம் ஒரு ஓவியம், அதன் கீழ் கதையின் தமிழாக்கம். அதன் கீழ் கதையின் ஆங்கில மூலம். இதே மாதிரி ஒவ்வொரு பக்கமும்! இந்தப் புத்தகம் மாதிரியே, கொ. மா.கோ. இளங்கோ மொழிபெயர்த்த பதினாறு புத்தகங்கள் (இன்று வரை) இதே மாதிரி உலகப் புகழ் சிறார் சித்திரக் கதைகளாக வந்துள்ளன.

தயவு செய்து, உங்கள் பிள்ளைகளுக்கு இக்கதைகளை வாசிக்கச் சொல்லி வளருங்கள். இக்காலப் பெற்றோர்களுக்குத் தெரியாத அடிப்படைகளை, இக்கதைகள் அவற்றின் முடிவில் சொல்லிச் செல்கின்றன.


உலகப் புகழ்பெற்ற சிறார் சித்திரக்கதை






# உலகின் தலைசிறந்த ஆசிரியர் பரிசு -2019

## (Global Teacher Prize 2019)




கல்வி வியாபாரமாகப் போய்விட்ட சூழலில் தனது குறிப்பிட்ட வருமானத்திலேயே வறிய பிள்ளைகளின் கல்விக்காக ஒரு பகுதியைச் செலவிடுவதென்பது எத்துணை மகத்தான காரியம். அதுவும் மிகவும் வறிய நாட்டில் ஒரு குக்கிராமத்திலுள்ள ஒரு ஆசிரியர் தனது சமூகப்பொறுப்பினை உணர்ந்து செயற்பட்டதற்காக உலகத்தின் உச்சத்துக்குச் சென்றுள்ளதென்பது ஒரு வரலாகிறது.

வர்க்கி பவுண்டேசன் என்ற நிறுவனம் ஆண்டுதோறும் உலக ரீதியாக உலகின் தலை சிறந்த ஆசிரியர் என்று பத்துப்பேரைத் தெரிவு செய்கிறது. பின்னர் அந்தப் பத்துப் பேரில் ஒருவரைத் தெரிவு செய்து அவருக்கு விருதும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாகவும் கொடுத்துக் கௌரவிக்கின்றது.

அந்தவகையில் இவ்வாண்டும் தேர்வு நடைபெற்று அதில் முதல் பரிசுக்குரியவராக கென்யா நாட்டைச் சேர்ந்த பீற்றர் தபிச்சி என்ற 36 வயதுடைய கணித மற்றும் பௌதீகவியல் ஆசிரியர் 2019 ஆம் ஆண்டுக் கான உலக சிறந்த ஆசிரியர் (Global Teacher Prize) விருதையும், ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பணப்பரிசையும் துபாயில் நிகழ்ந்த இறுதிச் சுற்று நிகழ்வின் வழியாகப் பெற்றிருக்கிறார்.

இவர் ஆபிரிக்கக் கண்டத்தில் கென்யா தேசத்திலுள்ள கெரிக்கோ செகன்டறி ஸ்கூல் (Keriko secondary school) என்ற பாடசாலையில் கற்பித்து வருபவர். இவர் கற்பிக்கும் பாடசாலையானது கென்யாவின் றிப்ற் வலி (Rift Valley)என்ற பகுதியிலுள்ள பிவானி (Pwani) எனும் மிகவும் பிற்பட்ட கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையாகும். தனது வருமானத்தில் 80 சதவீதத்தை வாழ்க்கைத் தரம் குன்றிய மாணவர்களின் கல்விச் செலவுக்காகக் கொடுப்பதோடு, அந்த மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பிரத்தியேக வகுப்புகளையும் நடத்திவருபவர்.

"நான்இங்கே இருக்கிறேன் என்றால் அது என்னுடைய மாணவர்கள் சாதித்திருக்கிறார்கள் என்றே அர்த்தப்படுகிறது. இந்தப் பரிசின் வழியாக அவர்களுக்குத் தான் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது, அவர்களும் இதுபோன்று எதையும் சாதித்துக் காட்டலாம் என்று அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறது" என்று தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருக்கிறார் பீற்றர் தபிச்சி (Peter Tabichi)

ஆசிரியர் பீற்றர்தபிச்சி (Peter Tabichi) இன் 95 வீதத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் மிகவும் வறிய குடும்பத்தினர் என்பதோடு மூன்றில் ஒரு பங்கினர் பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்தவர்களாகவும், போதைப் பாவனை, பதின்ம வயதுக் கர்ப்பம் தரித்தல், தற்கொலை போன்ற சவால்களுக்கு முகம் கொடுக்கும் சூழலில் இருக்கிறார்கள். ஏழு கிலோ மீட்டர் தூரம் வரை நடந்தே பள்ளிக்கு வருபவர்களாகவும், இந்தப் பகுதிகள் வரட்சியாலும், உணவுத் தட்டுப்பாட்டாலும் மிகவும் பாதிக்கப்பட்டவை என்பதும் குறிப்பிடத் தக்கது.

Varkey Foundation https://www.globalteacherprize.org என்ற அமைப்பின் வழியாக உலகின் தலை சிறந்த ஆசிரியர் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இம்முறை 179 நாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற பத்தாயிரத்துக்கும்அதிகமான பரிந்துரைகளிலிருந்து முதல் பத்துப் பேரில் ஒருவராக ஈழத்தைப் பின்புலமாகக் கொண்ட அவுஸ்திரேலியா வாழ் ஆசிரியை திருமதி யசோதை செல்வகுமாரனும் தெரிவாகியிருந்தார்.

இதற்கு முன்பதாக அவுஸ்திரேலியாவின் Commonwealth Award ஐயும் இவர் பெற்றுச் சிறப்புச் சேர்த்திருக்கிறார். நேற்று மார்ச் மாதம் 24 ஆம் திகதி துபாயில் நடந்த இந்த நிகழ்வில் யசோதை செல்வகுமாரனும் முதல் பத்துப் பேராக இந்த இறுதிச் சுற்றில் கலந்து சிறப்பித்ததோடு, தன்னுடைய ஆளுமைத் திறனைக் காட்டும் செயல்திறன் அரங்க நிகழ்விலும் பங்காற்றி வெகுவான பாராட்டுகளையும் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

எந்தவிதமான வாக்களிப்பு முறைமையோ, தரப்பாகுபாடுமோ இல்லாது ஆசிரியர் ஒருவரின் ஆளுமைத்திறன், அவரின் கற்பித்தல் பண்பு இவற்றை அலசி ஆராய்ந்தே இந்தப்பரிசு வழங்கப்படுகிறது.

"It's morning in Africa. The skies are clear. The day is young and there is a blank page waiting to be written. This is Africa's time" என்று நெகிழ்வாகக் கூறித்தன் பரிசை ஏற்றார் உலகின் தலை சிறந்த ஆசிரியர் திரு Peter Tabichi.

ஈழத்தில் போரால் பாதிக்கப்பட்ட வன்னிப்பகுதிகளில் இவ்வாறான தொரு சவாலுக்கு முகம் கொடுத்துக் கல்விச் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு இந்தக் கென்ய நாட்டு ஆசிரியர் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளார்.

- கானாபிரபா



நடிகை, பாடகி என தமிழ் சினிமாவில் முத்திரை பதித்தவர் ஆண்ட்ரியா. திறமையான பாத்திரங்களைத் தேர்ந்து நடிக்கும் இவரைச் சுற்றி பல சர்ச்சைகள் சுழன்று கொண்டே உள்ளன.

அடிக்கடி ரசிகர்களுக்கு கவர்ச்சி படங்களை வெளியிட்டு கிக் கொடுத்து விடுவார் ஆண்ட்ரியா. மேலாடைக்கு பட்டின் பூட்டாமல் இவர் வெளியிட்ட கவர்ச்சிப் படம்தான் இப்போது வலைதளத்தில் வைரல்.



சின்னத்திரை மூலம் பிரபலமானவர் வாணி போஜன். இப்போது, வைபவ் ஜோடியாக ஒரு படத்தில் நடித்து வருகிறார்.

க்ரைம், த்ரில் படமாக உருவாகி வரும் இன்னமும் பெயரிடப்படாத இப்படம் வரும் ஜூலையில் திரைக்கு வருகிறது.



ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படத்தில் நாயகியாக நயன்தாரா நடிக்கிறார். ‘காலா’ படம் போன்று இந்தப் படமும் மும்பையிலேயே படமாக்கப்படுகின்றது.

இம்மாத இறுதியில் படப்பிடிப்பு ஆரம்பமாகும் என அறிவித்தபோதும், தேர்தல் நேரம் என்பதால் பணப் பிரச்சினை, மற்றும் பல பிரச்சினைகள் ஏற்படலாம் என்பதால் படப்பிடிப்பு தள்ளிப் போகிறது.



செல்வராகவன் இயக்கத்தில் சூர்யா நடித்துவரும் ‘என்.ஜி.கே.’ படம் வரும் மே 31 ஆம் திகதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து விட்ட நிலையில் தற்போது படத்துக்கு குரல் கொடுக்கும் பணிகள் நடக்கின்றன.

சேலை கட்டியே தமிழ் ரசிகர்களைக் கட்டிப் போட்டவர் ராதிகா ஆப்தே. ஆனால், ஆபாச, நிர்வாணக் காட்சிகளில்கூட நடிப்பவர்.

பாடசாலைப் பருவத்தில் தன்னுடன் படித்த மாணவனுக்கு மழையில் நனைந்தபடி முத்தம் கொடுக்க வேண்டும் என்று விரும்பினாராம். ஆனால், அது நடக்கவில்லையாம்.

இப்போதுகூட மழையில் நனைந்தபடி முத்தம் கொடுக்கும் காட்சியில் நடிக்க வேண்டும் என்பது தனது கனவு எனக் கூறியிருக்கிறார்.





“சீதாவாக நடிக்க வேண்டும் என்றால் முன்னர் கே.ஆர். விஜயாவை தேடுவார்கள். இப்போது பார்த்தவுடன் கும்பிடத் தோன்றுபவர்களும் நடிக்கலாம், பார்த்தவுடன் கூப்பிடத் தோன்றுபவர்களும் நடிக்கலாம்” என்று நயன்தாரவை மேடையில் சாடியிருந்தார் ராதாரவி.

அவரின் இந்த சர்ச்சைப் பேச்சுக்கு திரையுலகில் பல தரப்பினர் மத்தியில் இருந்தும் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.



எச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடிக்கும் ‘நேர்கொண்ட பார்வை’ படம் ஒகஸ்ட் மாதம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அஜித்தின் பிறந்தநாளான மே முதலாம் திகதி இந்தப் படம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது வெளியீடு தள்ளிப் போய்விட்டுது.

ஆனாலும், இந்த வருடத்தில் அஜித்தின் இரண்டு படங்கள் வருவது ரசிகர்களை மகிழ்ச்சியில்





# நிழல் நிஜமானது

பங்களாதேஷை சேர்ந்த ஒருவர் ஆறு வருடங்களுக்கு முன்னர் கற்பனையில் வரைந்த மெஸ்ஸியின் டிஜிற்றல் ஓவியம் போன்று தற்போது நிஜத்தில் நடைபெற்றுள்ளமை உதைபந்தாட்ட உலகில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

கட்டட வடிவமைப்பாளராகப் பணிபுரிந்து வரும் சுகாஸ் நகியன்ஸ் என்பவர் 2013 ஆம் ஆண்டு உதைபந்தாட்ட ரசிகர்களின் பக்கம் ஒன்றுக்காக மெஸ்ஸியை டிஜிற்றல் ஓவியமாக வரைந்து கொடுத்துள்ளார். அதில் மெஸ்ஸி நீலம் மற்றும் சிவப்பு நிற ஜேர்சி அணிந்து பந்தைக் கொண்டும் செல்லும்போது பச்சை மற்றும் வெள்ளை நிற ஜேர்சி அணிந்த எதிரணி வீரர்கள் அவரைப் பின்தொடர்வது போலவும் அதில் ஒரு வீரர் கீழே விழுந்திருப்பது போலவும் வரைந்திருந்தார்.

இந்நிலையில் கடந்தவாரம் லாலிகா தொடரில் பார்சிலோனா - றியல் பெற்றிஸ் அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றது. இந்தப்போட்டியில் மெஸ்ஸியின் ஹெட்றிக் கோலோடு பார்சிலோனா 4 : 1 என்று வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியிலேயே சுகாஸ் வரைந்த டிஜிற்றல் ஓவியம் போன்ற ஒரு தருணம் அமைந்தமை பலரையும் வியப்புற வைத்துள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சுகாஸ் 'நான் 6 வருடங்களுக்கு முன்னர் வரைந்த ஓவியத்தை உதைபந்தாட்டக் கடவுளான மெஸ்ஸி தற்போது நிஜமாக்கியுள்ளார்.

பார்சிலோனாவின் ஜேர்சி நீலம் மற்றும் சிவப்பு நிறம் என்பதனால் அதனை மனதில் வைத்தே மெஸ்ஸியை குவிமையப்படுத்தும் நோக்கில் பச்சை நிறத்தில் ஓவியத்தை வரைந்திருந்தேன். ஆனாலும் றியல் பெற்றிஸ் அணியை நினைத்து நான் பச்சை மற்றும் வெள்ளை நிறச் சீருடையைத் தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக நிறங்கள் குறித்த புரிதலின் உள்ளுணர்வே அதனைத் தீர்மானித்திருந்தது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பரிசுத்தொகை அதிகரிப்பு





பிரான்ஸின் முன்னாள் ரென்னிஸ் வீராங்கனையான சிமோன் மத்தியூ பெயரில் கடந்த வருடம் ஆடுகளம் ஒன்று பிரெஞ்ச் ஓப்பன் ஒழுங்கமைப்பாளர்களால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த ஆடுகளம் புதிதாக 5000 இருக்கைகளோடு மறுசீரமைப்பு செய்யப்பட்டு கடந்தவாரம் மீள்திறப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆடுகளம் பிரெஞ்ச் ஓப்பன் போட்டிகள் நடைபெறும் றோலண்ட் கரோஸ் மைதானத்தில் உள்ள மூன்றாவது பெரிய ஆடுகளமாகும். இந்த நிகழ்வின் பொழுது கடந்த வருடம் பிரெஞ்ச் ஓப்பன் தொடரில் வழங்கிய பரிசுத்தொகையை விட இம்முறை 8 சதவீதத்தால் பரிசுத்தொகை அதிகரிக்கப்படும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் 48.35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒட்டுமொத்த பரிசுத்தொகையாக வழங்கப்படவுள்ளது. இதன்பிரகாரம் ஒற்றையர் போட்டிகளில் சம்பியன் பட்டம் வெல்லும் வீர, வீராங்கனைகளுக்குத் தலா 2.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

இது கடந்த வருடம் ஒற்றையர் போட்டிகளில் வழங்கிய பரிசுத்தொகையை விட 4.5 சதவீதம் அதிகமாகும். இந்த வருட பிரெஞ்ச் ஓப்பன் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதவி விலகல்




சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக தற்போது விளங்கி வருபவர் நியூசிலாந்தின் முன்னாள் வீரரான ஸ்ரீபன் பிளெமிங். இவர் அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் பிக்பாஸ் லீக் தொடரில் மெல்பேர்ண் ஸ்ராஸ் அணியின் தலைமைப்-பயிற்சியாளராகவும் விளங்கி வந்தார்.

இந்நிலையில் கடந்தவாரம் மெல்பேர்ண் ஸ்ராஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியில் இருந்து தான் விலகுவதாக பிளெமிங் அறிவித்துள்ளார்.

இதனை மெல்பேர்ண் ஸ்ராஸ் அணி நிர்வாகம் உறுதிப்படுத்தியுள்ளதோடு அவரது முடிவுக்கு மதிப்பளித்து அதனை ஏற்றும் கொண்டுள்ளது. இது குறித்து 'என்றும் நினைவு கூரத்தக்க வகையில் எமது கழகத்தில் தனது சுவடுகளை ஆழமாகப் பதித்துவிட்டே அவர் விலகுகின்றார்' எனக் குறிப்பிட்டுள்ளது.

பிளெமிங் 2015ஆம் ஆண்டு இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் 2016 மற்றும் 2019 ஆகிய இரண்டு பருவகாலங்களிலும் அணி இறுதிப் போட்டிக்கு வந்திருந்த போதிலும் இரண்டு தடவைகளிலுமே கிண்ணத்தை தவறவிட்டிருந்தது.

இது குறித்து பிளெமிங் 'நான் பதவி விலகுவதற்கும் வேறொருவர் அணியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் இது சரியான தருணமென நினைக்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# விலை குறைப்பு




எதிர்வரும் 11 ஆம் திகதி இங்கிலாந்தின் ஓல்ட்ரபோர்ட் மைதானத்தில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டி ஒன்றின் முதல் லெக் ஆட்டத்தில் மன்செஸ்ரர் யுனைற்றட் - பார்சிலோனா அணிகள் மோதவுள்ளன. இதையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது லெக் ஆட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி பார்சிலோனா மைதானத்தில் நடைபெறவுள்ளது. அந்தவகையில் வெளிநாட்டு ரசிகர்களுக்கான ரிக்கெட் ஒன்றின் விலையை பார்சிலோனா அணி நிர்வாகம் 102 பவுண்ஸாக நிர்ணயம் செய்திருந்தது. இது மன்செஸ்ரர் யுனைற்றட் அணி அந்நிய மண்ணில் விளையாடுகின்ற பொழுது விற்பனை செய்யப்பட்ட ரிக்கெட்டுகளின் அதிகூடிய விலையாகும். இந்த விலை அதிகரிப்பு விசனத்தை ஏற்படுத்திய காரணத்தால் மன்செஸ்ரர் யுனைற்றட் அணி நிர்வாகம் இரண்டாவது லெக் ஆட்டத்துக்காக 4610 ரிக்கெட்டுக்களை மாத்திரம் ஒதுக்கீடு செய்ததோடு மேலும் ஒரு முடிவுக்கும் வந்துள்ளது. அதாவது முதல் லெக் ஆட்டத்தை பார்வையிட வரும் பார்சிலோனா ரசிகர்களிடம் 102 பவுண்ஸ் ரிக்கெட் கட்டணமாக அறவிட உள்ளதோடு இரண்டாவது லெக் ஆட்டத்தை பார்வையிட பார்சிலோனாவுக்குச் செல்லும் மன்செஸ்ரர் யுனைற்றட் ரசிகர்களின் போக்குவரத்துச் செலவினத்தை கருத்திற்கொண்டு அவர்களிடம் ரிக்கெட் கட்டணமாக 75 பவுண்ஸ் மட்டும் செலுத்தினால் போதும் என அறிவித்துள்ளது.

# புதிதாக ஆரம்பம்



உலகளாவிய ரீதியில் சிறுவர்களின் உடல், உள நலன்களை வலுப்படுத்துவதிலும் அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பதிலும் விளையாட்டு அக்கடமிகளின் முக்கியத்துவத்தை முன்னரைவிடத் தற்போது பலரும் உணர்ந்துள்ளார்கள். இதனால் அவற்றுக்கான மவுசும் அதிகரித்த வண்ணம் உள்ளது. அந்தவகையில் ஐக்கிய ராச்சியத்தின் சர்ரேயில் அமைந்துள்ள 'த ஸ்ரார் கிரிக்கெட் அக்கடமி' பிரபல்யமான ஒன்றாகும். இவ்அகடெமியில் 8 வயதில் இருந்து பயிற்சி பெற்ற பல இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் இங்கிலாந்து தேசிய அணியிலும் முதற்தரக் கழகங்களிலும் தற்போது விளையாடி வருகின்றார்கள். இந்நிலையில் கடந்த வாரம் அவர்களோடு இணைந்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஐக்கிய ராச்சியத்தில் தனது முதலாவது கிரிக்கெட் அகடெமியை திறந்துள்ளது. இதையடுத்து இந்தக் கிரிக்கெட் அக்கடமியின் பெயர் 'ராஜஸ்தான் றோயல்ஸ் கிரிக்கெட் அக்கடமி' என மாற்றப்பட்டுள்ளது. தற்போது ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் முக்கிய வீரர்களாக விளங்கும் இங்கிலாந்தின் ஜோஸ் பட்லர் மற்றும் பென்ஸ்ரோக்ஸ் ஆகியோர் இவ் அக்கடமில் முக்கிய வகிபங்கை வகிப்பார்கள் எனக் கருதப்படுகின்றது. இந்த ஆரம்ப நிகழ்வில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பிராண்ட் அம்பாசிடரான ஷேன் வோர்ண் உட்பட இங்கிலாந்தின் முன்னாள் வீரர்கள் சிலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

[illegible] 30.03.2019 அன்று 107, [illegible]